# மன்னா

# பணம் அல்ல, பிறரை அன்பு கூர்வதே நம்மை செல்வராக்கும்!

## திருத்தந்தையின் தவக்கால செய்தி



"இறைவார்த்தை ஒரு கொடை, மற்ற மனிதர்களும் ஒரு கொடை" என்ற தலைப்பில், திருத்தந்தை பிரான்சிஸ் எழுதியுள்ள தவக்காலச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இறைவார்த்தையிலும் அருளடையாளங்களிலும் மற்ற மனிதரிலும் இயேசுவைச் சந்திக்க நம்மையே புதுப்பித்துக் கொள்ளவும், நம் கண்களை மறைக்கும் பாவத்தினின்று தூய்மையடைவும், தேவையில் இருப்போரில் இயேசுவைக்கண்டு அவர்களுக்குப் பணியாற்றவும் ஏற்றது தவக்காலம் என்று இச்செய்தியில் திருத்தந்தை கூறியுள்ளார். திருஅவை நமக்கு வழங்கும், நோன்பு, செபம், தர்மம் செய்தல் ஆகியவை வழியாக நம் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தவும், முழுமனத்துடன் நாம் இறைவனிடம் திரும்பி வரவும், தவக்காலத்தில் அழைப்பு விடுக்கப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## கல்மடுக் கிராமத்தில் புதிய ஆலயம்





கனகராயன் குளப்பங்கில் உள்ள கல்மடு கிராமத்தின் புதிய ஆலயத்திறப்புவிழா கடந்த 25.02.2017அன்று சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. புனித பிரான்சிஸ் சவேரியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த புதிய ஆலயத்தை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை திறந்துவைத்தார். கனகராயன்குளப் பங்குத்தந்தை அருட்திரு. G. பென்சஸ்லொஸ் (அ.ம.தி) அடிகளாரின் தலைமையில் இத் திறப்புவிழா நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள்.

## புனித யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு 'கலையருவி'யின் புதிய நூல் உருக்கொடுத்த உத்தமர்



மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம் கலையருவி புனித யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு நூல் ஒன்றை வெளிக்கொணர்ந்துள்ளது. "உருக்கொடுத்த உத்தமர் தூய யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும்" என்ற இந்நூல் மன்னார் மறைமாவட்ட பங்குகளிலும் இன்னும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் விநியோகிக்கப் பட்டு வருகின்றது. ஒவ்வொரு குடும்பமும் இந்நூலை வாங்கி வாசித்துப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இந்நூலைப் பெற விரும்புகின்றவர்கள் மன்னார் பத்திரிகைப் பணியகத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல: 023-2250789/ 077-7420811

## கலையழகு மிகுந்த மாந்தை புனித லூர்து மாதா ஆலயத்திறப்பு விழா



மருதமடு அன்னையின் ஆரம்ப இருப்பிடமாகிய மாந்தையில் புதிதாக கலையழகுடன் அமைக்கப்பட்ட லூர்து அன்னை ஆலயம் மன்னார் அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களினால் 18.02.2017 அன்று மாலை 4.30 மணிக்கு அபிசேகம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. (மேலதிக படங்களையும் விபரங்களையும் 8ஆம் பக்கத்தில் காணலாம்.)

## முருங்கனில் கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிகழ்வுகளும் வை.எம்.சி.ஏ. அமைப்பின் உருவாக்கமும்







மன்னார் மறைமாவட்ட முருங்கன் மறைக்கோட்ட இளையோர்களும், மன்னார் சேகரத்தின் மெதடிஸ்த இளைஞர்களுக்குமான, உலக கிறிஸ்தவ ஒன்றிப்பு வார சிறப்பு நிகழ்வு முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ச. மாக்கஸ் அடிகளாரின் தலைமையில் 22.01.2017அன்று முற்பகல் 11.30 மணியளவில் முருங்கன் டொன்பொஸ்கோ பிரதான மண்டபத்தில் செபவழிபாட்டுடன் ஆரம்பமானது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## நானாட்டானில் புதிய கன்னியர் இல்ல கட்டிடத்திறப்பு



நானாட்டானில் அமைந்துள்ள திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் புதிய கட்டடம் ஒன்று கடந்த 27.02.2017 அன்று மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் திறந்துவைத்தார்

## மன்னாரில் மூன்று நூல்களின் வெளியீட்டுவிழா








மன்னாரில் மேடையேற்றப்பட்டுவரும் மூன்று நாடக நூல்களின் வெளியீட்டு விழா கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி நானாட்டான் கலாசார மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. சந்தியோகுமையோர் நாடகம், இம்மானுவேல் நாடகம், என்றிக்கு எம்பரதோர் நாடகம் ஆகிய மூன்று கத்தோலிக்க நாட்டுக்கூத்து நாடகப் பிரதிகளே நூலுருவாக்கப்பட்டு வெளியீடு செய்யப்பட்டவையாகும். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இந்த நூல்களை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம்







ஏறக்கறைய 65 மன்னார் மறைமாவட்ட குருக்கள் தனது வருடாந்த தியானத்தில் பங்குனிமாதம் 5ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை மடுத்தியான இல்லத்தில் மேற்கொண்டார்கள். தமிழ்நாடு மதுரை உயர்மறைமாவட்ட பேராயர் மேதகு பாப்புசாமி அந்தோனி ஆண்டகை அவர்கள் தியானத்தை வழிநடத்தினார்.

# மன்னா
மனப்பொழிவு

## தவக்காலத்தை எப்படி அர்த்தமுள்ளதாக்கலாம்...

தவக்காலத்தில் நாம் என்ன செய்யலாம்? என்ன முயற்சிகள் எடுக்கலாம்? இது தவக்காலத்தின் ஆன்மீக தாகமுள்ள எல்லோருக்கும் எழும்புகின்ற அடிப்படை வினா. ஒவ்வொரு வருடமும் கிறிஸ்தவர்கள் இந்த கேள்விக்கு ஏதே ஒரு விதத்தில் பதில் அளித்து தங்கள் ஆன்மீக வாழ்வை கட்டியெழுப்ப முயன்றுகொண்டே இருக்கிறார்கள் ஆயினும் இந்த கேள்விக்கு எமது திருத்தந்தையை விட வேறு எவரும் அருமையாக எமக்கு வழிகாட்ட முடியாது. ஆகவே எமது திருத்தந்தை பரிந்துரைக்கும் எட்டு விடயங்களை இந்த கேள்விக்கு பதிலாக உங்களோடு பகிர்கின்றேன்.

*1. சோம்பலினால் ஏற்படும் தீமைகளை விட்டு அகலுங்கள்:-*

இன்று நம்மை அதிகம் தீமைக்கு இட்டு செல்வது சோம்பலுக்கான அடிமைத்தனங்களே. குடும்பத்தில் பொறுப்பற்ற நிலை, நமது கடமைகளை செய்ய மற்றவரை ஏவுதல், குறுக்கு வழியில் சம்பாதிக்க முயலுதல் போன்ற பல சோம்பலுக்கான அடிமைத்தனங்கள் எம்மை தீமைக்கு இட்டுச்சொல்கின்றன.

*2. உங்களுக்கு வருத்தத்தை தரக்கூடியதை செய்யுங்கள்:-*

பொதுவாக நாங்கள் எங்களுக்கு வருத்தத்தை தராத எங்களிடம் மேலதிகமாக உள்ள அல்லது இலகுவில் செய்யக்கூடிய அன்புச் செயல்களையே செய்யமுயல்கின்றோம். ஆனால் உண்மையான ஏழ்மை என்பது நம்மில் துன்பத்தை பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. தன்னலமறுப்பு இல்லாத, என்னில் தாக்கத்தை ஏற்படுத்த எந்த ஒரு அன்பு செயலும் மற்றவருக்கு பயன் அளிக்காது.

*3. பக்தி முயற்சிகள்:-*

இது நான் பக்திமான் என வெளி உலகத்திற்கு தம்பட்டம் அடிப்பதற்கு அல்ல மாறாக நம்முள் புதைந்திருக்கும் இறைவனை கண்டு பிடித்து நான் என்ற மனநிலையை ஒழிக உதவுகிறது. நாம் இறைசாயலில் படைக்கப்பட்டோம் ஆனால் பாவத்தினால் நம்மிடம் இருந்த இறைசாயலை நமக்குள்ளே புதைத்ததால் இந்த இறைசாயலை வெளிகொணர இப்பக்தி முயற்சிகள் உதவுகின்றன.

*4. திருவருட்சாதனங்களில் பங்கெடுங்கள்:-*

தவக்காலம் கடவுகளை எங்களில் வாசம்பண்ண அனுமதித்து அவரைப்போல் எங்களை மாற்ற அழைக்கும் காலம். இது இறைவார்த்தையை கேட்பதாலும் திருவருட்சாதனங்களில் பங்கெடுப்பதால் மட்டுமே முடியும். சிறப்பாக நற்கருணை, ஒப்புரவு அருட்சாதனங்களில் அடிக்கடி பங்கெடுப்பதன் மூலம் அவரைப்போல் எங்களை மாற்ற முற்படலாம்.

*5. செபம்:-*

தீமையில் விழவிடாமல் இருக்க, எங்கள் கல்லான நெஞ்சத்தை உடைக்க, இறைவனின் அன்பின் ஆளத்தை அறிய செபிக்கலாம். மேலும் மற்ற மனிதருக்காக, துன்பத்திலே, ஏழ்மையிலே வாடுகின்றவர்களுக்காக பரிந்துரை செபம் செய்யலாம். செபமானது எப்போதும் நெருக்கமானதாகவும் ஆளமான உறவு உள்ளதாகவும் ஒன்றித்து இருப்பதாகவும் அமைய வேண்டும்.

*6. தவம்:-*

இதயத்தை உடைப்பதும் இல்லாதோர்க்கு இரங்குவதும் நம்மை ஆட்டிப்படைக்கின்ற ஆசை வலைகளில் இருந்து விடுபட்டு எம்மில் ஊறி இருக்கிற சாதி, சமய, இன, வேறுபாடுகளை களைவதும் பணத்திலும் பகட்டிலும், ஆடம்பரத்திலும் சமூககௌரவத்தை முன்னிலைப்படுத்தும் மாய சிந்தனைகளை உடைத்தெறிவதும் அளவோடு அனுபவித்து எளிமையை கடைப்பிடித்து ஏழைகளை தாங்குவது ஆகும்.

*7. தானம்:-*

நமக்கு பயன் தராததை அல்லது குறைவாக பயன்தருவதை கொடுப்பது உண்மையான தானம் அல்ல. மாறாக நமக்கு சிறந்த பயன்தரக்கூடியதை பகிர்வதே உண்மையான தானம். இது பற்றுகளில் இருந்து விடுபட உதவுகின்றது.

*8. நற்செய்தி அறிவிப்பு:-*

நற்செய்தி அறிவிப்பு என்பது இறைவனின் இரக்கத்தின், அன்பின் செய்தியை மகிழ்ச்சியான உள்ளத்தோடு வெளிப்படுத்துவது. உடைந்த உள்ளத்தோரை தேற்றுவதும், நம்பிக்கையை இழந்து இருளிலே இருக்கின்றவர்களுக்கு நம்பிக்கை கொடுப்பதும், நற்செய்தியை வாழ்வதால் நாம் அனுபவிக்கும் மகிழ்ச்சியை மற்றவரோடு பகிர்ந்து கொள்வதுமே சிறந்த நற்செய்தி அறிவிப்பு.

இறுதியாக மனமாற்றமே தவக்காலம் விடுக்கும் அழைப்பு, நம் வாழ்வை மாற்ற நம்மிடம் ஏற்படுத்த வேண்டிய மாற்றத்தை செயல்படுத்த வேண்டிய வழி முறைகளை, உடைத்தெறிய வேண்டிய சுவர்களை, இந்நாட்களில் யோசிப்போம், செயல்படுத்துவோம். தவக்காலங்களில் மட்டும் கடினநோன்பு இருப்பதும், ஒறுத்தல் செய்வதும், தவக்காலம் முடிந்ததும் பழைய வாழ்வே கதி என்று இருக்கக் கூடிய காலம் மாற வேண்டும். அந்த மாற்றத்திற்காக தனிப்பட்ட ரீதியில் முயன்று உழைத்து இறைவரம் வேண்டுவோம்.

*அருட்தந்தை தயாளன் கூஞ்சு*

## பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா



பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா 19.03.2017 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. யாழ் மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர் புனித அந்தோனியார் திருச்சொருபத்தினால் பக்தர்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கப்பட்டது. இத் திருப்பலியில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் கையேடு

ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் என்ற செப முயற்சிக்கு உதவும் மேய்ப்புப்பணி கையேடு ஒன்றை, புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை வெளியிட்டுள்ளது. இரக்கத்தின் யூபிலி ஆண்டின் நிறைவாக, 2016ஆம் ஆண்டு கார்த்திகையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட திருத்தூது கடிதத்தில், ஒப்புரவு அருளடையாளம், கிறிஸ்தவ வாழ்வின் மையமாக அமைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதற்கு உதவியாக, தவக்காலத்தில், ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் என்ற செப முயற்சி பற்றியும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் திருத்தந்தை. இந்தப் பக்தி முயற்சிக்கு உதவியாக, புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை, 63 பக்க மேய்ப்புப்பணி கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. 'நான் இரக்கத்தை விரும்புகிறேன்'' (மத்.9,13). என்ற தலைப்பில், இம்மாதம் 24, 25 திகதிகளில், ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் என்ற செப முயற்சி கடைப்பிடிக்கப்படுகின்றது

### காலதாமதத்திற்கு வருந்துகிறோம்

மன்னா பத்திரிகையின் ஆசிரியர் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால் இம்மாதப் பத்திரிகை (மார்ச் மாதம்) கால தாமதமாக வெளிவருகின்றது என்பதை மன்னா வாசக அன்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்வரும் மாதங்களில் மன்னா பத்திரிகை நேரகாலத்தோடு உங்கள் கரம் வந்து சேர முயற்சி செய்வோம். நன்றி

*- மன்னா நிர்வாகம் -*

### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**- மன்னா நிர்வாகம்.**

## மன்னார் மறைமாவட்டம் திருவழிபாட்டு நாட்காட்டி - 2017

### பங்குனி

19. தூய சூசையப்பர் மரியாவின் கணவர் பெருவிழா - வேப்பங்குளம், இலுப்பக்கடவை, காத்தான்குளம், தாழ்வுபாடு.
- மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்களின் பெயர் கொண்ட திருவிழா.
22. கோமரசன்குளம் கல்வாரி திருத்தல பாத யாத்திரை
24. கோமரசன்குளம் கல்வாரி திருத்தல பாத யாத்திரை நிறைவும் திருப்பலியும்.
31. ஓலைத்தொடுவாய் கர்த்தர் ஆலய பாத யாத்திரையும் திருப்பலியும்.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் 2017ஆம் ஆண்டிற்கானசெயற்பாடுகள்

**தியானங்கள்**

18,19. 02. 2017 – தவக்காலத்தியானம் வவுனியா மறைக்கோட்டம் - இறம்பைக்குளம்
23,24. 02. 2017 - தவக்காலத்தியானம் மடுமறைக்கோட்டம் - மாந்தை லூர்து அன்னை ஆலயம்
24,25. 02. 2017 - தவக்காலத்தியானம் முருங்கன் மறைக்கோட்டம் - கிறிஸ்து அரசர் ஆலயம்
25,26. 02. 2017 - தவக்காலத்தியானம் மன்னார் மறைக்கோட்டம் - தோட்டவெளி

**இளைஞர்களுக்கான விளையாட்டுக்கள்**

10.05.2017 – வவுனியா மறைக்கோட்டம் - இறம்பைக்குளம்
11.05.2017 – முருங்கன் மறைக்கோட்டம் - கிறிஸ்து அரசர் ஆலயம்
13.05.2017 – மடுமறைக்கோட்டம் - ஆட்காட்டிவெளி
14.05.2017 – மன்னார் மறைக்கோட்டம் - புனிதசவேரியார் ஆண்கள் கல்லூரி

**மறைக்கோட்ட ஒன்று கூடல்கள் - ஒவ்வொருமாதமும்**

1ஆம் வாரம் - மன்னார் மறைக்கோட்டம்
2ஆம் வாரம் - வவுனியா மறைக்கோட்டம்
3ஆம் வாரம் - மடுமறைக்கோட்டம்
4ஆம் வாரம் - முருங்கன் மறைக்கோட்டம்

**சிரமதானம்**

04.03.2017 சிரமதானம் - சுவாமித் தோட்டம்

**மறைமாவட்ட ஒன்று கூடல்**

04.03.2017 – தலைமன்னார்
25,26. 06. 2017 – செட்டிகுளம்
23,24. 09. 2017 – கற்கிடந்தகுளம்
02,03. 11. 2017 – பண்டிவிரிச்சான்

**போட்டிநிகழ்வுகள்**

- நாடகம் : தூய யோசப்வாஸ் வழி நின்று தற்கால உலகில் விசுவாச வாழ்விற்கு சான்று பகர்வோம்
- வில்லுப்பாட்டு : தூய யோசப்வாஸ் அடிகளாரின் பார்வையில் 21ஆம் நூற்றாண்டில் திருச்சபைபணியும் சவால்களும்.

**கலைநிகழ்வுப் போட்டி நிகழ்வுகள்**

- 19.08.2017 – வவுனியா மறைக்கோட்ட மட்ட நாடக, வில்லுப்பாட்டு போட்டிகள்
- 20.08.2017 – முருங்கன் மறைக்கோட்ட மட்ட நாடக, வில்லுப்பாட்டு போட்டிகள்
- 26.08.2017 - மடு மறைக்கோட்ட மட்ட நாடக, வில்லுப்பாட்டு போட்டிகள்
- 27.08.2017 – மன்னார் மறைக்கோட்ட மட்ட நாடக, வில்லுப்பாட்டு போட்டிகள்

**மறைமாவட்டப் போட்டி**

01.09.2017 – நான்கு மறைக்கோட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட நிகழ்வுகளுக்கான போட்டி

**கலைவிழா – 2017**

03.09.2017 – வவுனியா மறைக்கோட்டம்
09.09.2017 – முருங்கன் மறைக்கோட்டம்
10.09.2017 – மன்னார் மறைக்கோட்டம்
16.09.2017 – மடுமறைக்கோட்டம்



**தேசிய ஒன்று கூடல்**

பதுளை – 17,18,19. 03. 2017
காலி –
மன்னார் -

**நிர்வாக சபை ஒன்று கூடல்**

12.03.2017 - இளைஞர் பணியகம்
30.04.2017 - இளைஞர் பணியகம்
30.07.2017 - இளைஞர் பணியகம்
29.10.2017 - இளைஞர் பணியகம்
03.12.2017 - இளைஞர் பணியகம்
- புனித யோசப்வாசின் திருத்தலதரிசிப்பு சுற்றுலா பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- மன்னா நிர்வாகம் -

# பத்திமா அன்னை காட்சி கண்ட இருவர் புனிதர்களாக அறிவிப்பு



போர்த்துக்கல் நாட்டில் பத்திமா நகரில் அன்னை மரியா காட்சி அளித்ததை கண்ணுற்ற மூவரில் அருளாளர்களான பிரான்சிஸ்கோ மார்த்தோ மற்றும் அவரது தங்கை ஜெசிந்தா மார்த்தோ ஆகிய இருவரின் பரிந்துரைகளால் நிகழ்ந்துள்ள புதுமைகளை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்விருவரையும் புனிதர்களாக உயர்த்தும் வழிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார். பத்திமா நகரில் அன்னை காட்சி அளித்ததன் நூறாம் ஆண்டை சிறப்பிக்க மே மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அத்திருத்தலத்திற்கு செல்லவிருக்கும் வேளையில் இவ்விருவரையும் புனிதர்கள் என அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

புனிதர் பட்டம் வழங்கும் வழிமுறைகளை ஒருங்கிணைக்கும் பேராயத்தின் தலைவர் கருதினால் அஞ்சலோ அமார்த்தோ அவர்கள் திருத்தந்தையை சந்தித்தவேளையில் திருத்தந்தையின் ஒப்புதலை பெறுவதற்கான பல்வேறு அருளாளர்கள் மற்றும் இறையடியாரை குறித்து திரட்டப்பட்ட தகவல்கள் அடங்கிய ஒன்பது ஆவணங்களை சமர்ப்பித்தார்.

புனிதர்களாக உயர்த்துவதற்கு திருத்தந்தையால் ஒப்புதல் வழங்கப்பட்ட முப்பது பேரில் அருட்பணியாளர்கள், பொதுநிலையினர் மற்றும் மூன்று வளர் இளம் பருவத்தினர் அடங்குவர்.

# உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பட்டமளிப்பு விழா




யாழ். மறை மாவட்ட குடும்ப வளத்துணை நிலையமாகிய அகவொளி நிறுவனத்தில் 12.02.2017 அன்று உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பாடநெறியை நிறைவு செய்த இருவருட மாணவர்கள் 26 பேருக்குப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இக்கல்வி நிறுவனத்தின் வேந்தரும் யாழ் ஆயருமான பேரருள்திரு யஸ்ரின் பி. ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராகவும் புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருமட அதிபர் அருள்தந்தை ரீ. யே. கிருபாகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அருள்தந்தையர்கள், அருட்சகோதரிகள், விரிவுரையாளர்கள், மாணவர்களின் பெற்றோர் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டனர். ஆயர் தனது உரையில் "உயர்கல்வி நிறுவனங்கள் தொழில்வாய்ப்பைப் பெற்றுத்தர வல்ல பாடநெறிகளைக் கற்பிப்பதே காலத்தின் தேவை உள ஆற்றுப்படுத்தல் பாடநெறி தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தரும் ஒரு பாடநெறி" என்ற மையப் பொருளின் கருத்துரை வழங்கினார். மேலும் இந்நிறுவனத்தில் உளவியல் மற்றும் உள ஆற்றுப்படுத்தல் இளங்கமைமாணிப் பாடநெறியை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஆயரும் இயக்குனரும் விபரித்தனர். இயக்குனரான அருள்திரு. இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளார் இந்நிறுவனத்தின் குடும்பம் மற்றும் உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையை அவையில் சமர்ப்பித்தார். வருடாவருடம் நடாத்தப்படும் இப்பாட நெறியானது அயர்லாந்து தேசிய பல்கலைக் கழகத்தோடு இணைந்து நடாத்தப்படுவதால் அப்பல் கலைக்கழகமே சான்றிதழையும் வழங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரோமா த்ரே அரசு பல்கலைக்கழகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ்




புலம்பெயர்ந்த மக்கள், ஐரோப்பிய கலாசாரத்திற்கு ஆபத்தாக இல்லை, ஆனால், அம்மக்கள், சமுதாயங்கள் வளர்வதற்கு, சவாலாக உள்ளனர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 17.02.2017 வெள்ளிக்கிழமை அன்று இத்தாலிய பல்கலைக்கழக மாணவர்களிடம் கூறினார் உரோம் நகரிலுள்ள, ரோமா த்ரே என்ற, மூன்றாவது அரசு பல்கலைக்கழகத்திற்கு, வெள்ளி காலை பத்து மணியளவில் சென்று, ஏறக்குறைய இரண்டு மணி நேரம் அங்கிருந்து, மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார். திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த ஆண்டில், கிரேக்க நாட்டின் லெஸ்போஸ் தீவைப் பார்வையிட்ட பின், அங்கிருந்து அழைத்து வந்த சிரியா நாட்டு புலம் பெயர்ந்த பெண் Noru Essa அவர்கள், தற்போது, இத்தாலிய அரசின் உதவியுடன், இப்பல்கலைக்கழகத்தில் பயின்று வருகினார். சிரியா மற்றும், ஈராக் நாடுகளில் புலம் பெயர்ந்த மக்கள், ஐரோப்பிய கிறிஸ்தவக் கலாசாரத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளனரா? என்று கேட்டதற்குப் பதிலளித்த திருத்தந்தை, தனது அர்ஜென்டினா நாடும், குடியேற்றதாரர்களால் நிறைந்தது எனவும் குடியேற்றம் ஆபத்தாக இல்லையெனவும் தெரிவித்தார். மேலும், ரோமா த்ரே பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களையும் சந்தித்தார் திருத்தந்தை. அச்சந்திப்பில் உரையாற்றிய திருத்தந்தை, அரசியல்வாதிகள், தங்களின் வாக்குவாதங்களைக் குறைத்து, ஒருவரை ஒருவர் புண்படுத்துவதை நிறுத்தி, உரையாடலுக்குத் திறந்த மனதுள்ளவர்களாய் செயல்படுமாறு கூறினார்.

45 நிமிடங்கள் ஆற்றிய இந்த உரையில், ஒருவரை ஒருவர் அவமதிப்பது, சாதாரண ஒரு காரியமாக மாறியுள்ளது. எனவே பேச்சுக்களைக் குறைத்து, பிறருக்குச் செவிமடுப்பதை அதிகரிக்குமாறு கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

குடியேற்றதாரருக்கு எதிரான இயக்கங்களை குறித்தும் எச்சரித்த திருத்தந்தை, புதிதாக நாட்டுக்கு வருகிறவர்களை, உடன்பிறந்த சகோதர, சகோதரிகளாக நடத்துமாறும் வலியுறுத்தினார். பொறுமையோடு உரையாடலில் ஈடுபடும் வழிகளைத்தேடுமாறும் கேட்டுக்கொண்ட, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, பிறருக்குத் திறந்த மனதுள்ளவராய் இல்லாதபோது, பிறரை மதிக்காதபோது, பிறரோடு உரையாடல் நடத்தாதபோது, போர்கள் நம் இதயங்களில் தொடங்குகின்றன எனவும் கூறினார். உரோம் புனித பவுல் பசிலிக்காவுக்கு அருகிலுள்ள இத்தாலிய ஆய்வுப் பல்கலைக்கழகமான ரோமா த்ரே (Roma tre university) 1992ஆம் ஆண்டில், இத்தாலிய கல்வி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது. இது உரோம் நகரிலுள்ள மூன்றாவது அரசு பல்கலைக்கழகமாகும்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :** கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

## பேருவளை படகு விபத்திற்கு ஆயர் பேரவை துயர் பகிர்வு



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் களுத்துறை – கட்டுகுருந்தவிலுள்ள கத்தோலிக்க ஆலயத்தில் 19 பெப்ரவரி 2017 ஞாயிறு அன்று வருடாந்த திருவிழாவில் பங்கேற்ற யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 16 பேர் உயிரிழந்தனர். 32 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது இத்துயர நிகழ்விற்கு தனது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்து ஓர் இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளது. அதில் தமது உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாகவும். அதே வேளையில் மனித தவறினால் ஏற்பட்ட இந்த கவலைக்குரிய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தமது ஆன்மீக உடனிருப்பை உறுதிப்படுத்த விரும்புவதாகவும், இந்த கஷ்டமான வேளையில் இறைவன் அருகிலிருந்து அவர்களைத் தேற்ற வேண்டும் என்றும், உயிரை இழந்த அனைவருக்கும் முடிவில்லா அமைதியை இறைவன் கொடுக்க வேண்டுமென்று மன்றாடுவதாகவும் அவ்இரங்கல் செய்தி அமைந்திருந்தது.

## திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் 150ஆவது ஆண்டு விழா



திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழா 19.03.2017 அன்று கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. எதிர்க்கட்சி தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்லூரியின் பழைய மாணவருமான இரா. சம்பந்தன், சிறப்பு அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

மேலும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட், மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி, பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல், முன்னாள் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்றனர். இதன்போது கல்லூரியின் 150வது விழாவை ஒட்டிய முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இறைவனில் இளைப்பாற்றி அடைந்தவர்கள்



அருட்தந்தை
ஜோ.பர்னாந்து
அடிகளார்


அருட்தந்தை
கப்ரியேல் நாணயக்கார
(அமதி) அடிகளார்



அருட்தந்தை
லோறன்ஸ் (அமதி)
அடிகளார்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை ஜோ. பர்னாந்து அடிகள் 24.02.2017 அன்று காலமானார். அருட்தந்தை கப்ரியேல் நாணயக்கார அமதி அடிகள் 23.02.217 அன்று இறைவடி சேர்ந்தார். அருட்தந்தை லோரன்ஸ் (அ.ம.தி) அடிகள் 28.02.217 அன்று காலமானார். இவ் அருட்தந்தையர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்னா பிரார்த்திக்கின்றது.

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா 12.03.2017 அன்று வெகுசிறப்பாக இடம்பெற்றுள்ளது. குறித்த நிகழ்வு யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஜெபரட்ணம் தலைமையில் நடைபெற்றதுடன், திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்ட செயலகம், மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலகம் ஆகியன இணைந்து ஒழுங்கமைத்த இந்த திருவிழாவில் இலங்கையில் இருந்து பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர். மேலும், தமிழகத்தில் இருந்து சுமார் 5 ஆயிரம் வரையான பக்தர்கள் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் தமிழக மீனவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தையடுத்து தமிழக மீனவர்கள் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவை புறக்கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது?

ஒரு வருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா - ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா - ரூபா 3,500.00

**பணம் அனுப்பும் விபரம்** 14ஆம் பக்கத்தில் உள்ளது.

**எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள் :**
077 - 7420811,
023 - 2250789

**புனித யோசவ்வாஸ் ஆண்டு சிறப்புக் கட்டுரை**

# புனித ஜோசவ்வாஸ் அடிகளாரின் மறையறிவிப்பு முறைமை

- அருட்பணி ச.வி.ப. மங்களராஜா, புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம் -

ஒரு மறைப்பணியாளரின் மறை அறிவிப்பு முறைமையின் பயனுடைமை அவரது சாட்சிய வாழ்வில் தான் தங்கியுள்ளது. வாஸ் அடிகள் ஒரு இறை மனிதராக, செபமனிதராக, இறைவனில் அன்பிலும், இரக்கத்திலும் அசையாத நம்பிக்கை உள்ளவராக இருந்தமை இறைவனின் சாயலாக படைக்கப்பட்ட மற்றவர்களுக்கு அவர்கள் இன்னும் அந்த இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் போதிய அளவு பெறாது இருந்தால் அதை அவர்கள் பெறுவதற்கு ஒரு கருவியாக செயற்பட அவரைத் தூண்டியது இப்பணியை ஆற்றுவதற்கு எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கவேண்டி ஏற்பட்டாலும், எவ்வளவுக்குத் தம்மைத் தாழ்த்த வேண்டுமோ எல்லாவற்றையும் அனுபவிக்கத்தயாராக இருந்தார். இப்பண்புகளை அவர் திடீர் என்று ஏற்பட்ட ஒரு மனமாற்றத்தாலே எதிர்பாராத திருப்பத்தினாலோ பெறவில்லை. தமது குடும்பத்தில், சிறுவயதிலிருந்தே அவர் இப்பண்புகளைக் கொண்டவராகவே வளர்ந்து, பின் பாடசாலைப் பருவம், குருமட வாழ்க்கைக்காலம், இளம் குருவாக இருந்த காலம், ஆகிய பல்வேறு கட்டங்களில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்துள்ளது. இதனால்தான் உலகப் போக்கு, பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் ஆகியவை வாஸ் அடிகளாரைத்திசை மாற்றவில்லை. இதனால் தான் உயிராபத்து உட்பட பல்வேறு ஆபத்துக்கள் நிறைந்த இலங்கைப் பயணத்துக்கான தீர்மானம் அவர் திடிரென்று எடுத்த தீர்மானம் அல்ல அவர் நடந்து வந்த பாதையில் அவர் எடுத்த இயல்பான அதே திசையில் அவரை முன்னேறிச் செல்ல எடுத்த தீர்மானம். இலங்கைப் பணிக்கான வழிமுறைகளையும் அதற்கேற்ப தமது வாழ்க்கை முறைகளையும் அவர் தமக்கு ஏற்புடையதாக்கிக் கொண்டார்.

### புனித வாஸ் எப்போதும் ஒரு இறை மனிதனாக, செப மனிதராக இருந்து செயல்பட்டார்.

இறைவனில் ஆழமான அன்பும், அவரது இரக்கத்தில் நம்பிக்கையும் கொண்டவர் மட்டுமல்ல எல்லா மனிதரையும் அன்பு செய்யும் விசாலமான மனம் கொண்டவராகவே சிறுவயதிலிருந்து வளர்ந்து வந்தார். மற்றவர்களுக்கு எப்போதும் நல்லதையே செய்ய வாய்ப்புக்களைத் தேடிக்கொண்டிருப்பார். தமது குருத்துவப் பணியின் ஆரம்பத்திலிருந்தே இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் எடுத்துரைப்பதற்கு எவ்வளவு தூரமும் பயணம் பண்ணவும் எவ்வளவு கஷ்டங்களையும், எதிர்ப்புக்களையும், ஆபத்துக்களையும் எதிர்கொள்ளத் தயங்கியவரல்ல. எப்போதும் இறைபராமரிப்பில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார். இவர் அடுத்தநாள் என்ன கிடைக்கும், என்ன நடக்கும் என்று ஒரு போதும் கவலைப்பட்டவரல்ல என்பதற்கு அவரது வாழ்க்கை வரலாற்றை முதலில் எழுதிய செபஸ்தியான் டி றேகொ ஒரு நிகழ்வைக்குறிப்பிடுகிறார். ஒருமுறை வன்னிக்காடுகள் ஊடே நடந்து சென்று கொண்டிருக்கும் போது அவர்களுடைய உணவு (அரிசி) கையிருப்பு தீர்ந்து கொண்டுபோனது. அப்போது அவர்களிடம் இருக்கும் கடைசிக்கையிருப்பு அரிசியை அவித்து அவருக்கு சோற்றை கொடுத்துவிட்டு தாம் கஞ்சியைக்குடித்து சமாளிக்கலாம் என்று அவர்கள் பேசிக்கொண்டதை அவர் கேட்டுவிட்டார். வாஸ் அடிகள் அதற்குடன்படவில்லை இருக்கும் சோற்றைக் சமமாகப்பிரித்து எல்லோரும் சாப்பிடுவோம். பின்னர் இறைவன் பார்த்துக்கொள்வார் என்றுவிட்டார். பின்னர் எதேச்சையாக அவ்வழியை ஒரு மனிதர் கிறிஸ்தவரல்லாதவர் அவ்வழியே வரநேர்ந்தது. அப்போது வாஸ் அடிகள் ஒரு பக்கத்தில் தமது கட்டளைச்செபத்தை (Breviary) செபித்துக்கொண்டிருந்ததைக்கண்டார். வாஸ் அடிகளின் செயற்பாட்டால் அம்மனிதர் ஈர்க்கப்பட்டு அருகில் வந்து தம்மிடம் கையிருப்பில் இருந்த அரிசியை அவர்களிடம் கொடுத்துவிட்டுச்சென்றார்.

சாதாரணமாக ஒரு போதும் திருப்பலி ஒப்புக்கொடுக்காது விடமாட்டார். சிலவேளைகளில் கடும் சுகவீனமுற்று மிகவும் பலவீனமான நிலையில் பலியொப்புக்கொடுக்க முடியாவிட்டாலும் நற்கருணை உட்கொள்வார். அதுவும் முடியாத போது ஞானவிதமாக உட்கொள்வார்.

சிலுவை மீது அதிகப்பற்றுக்கொண்டவராயிருந்தார். மனிதனுடைய துன்பங்கள், பசாசின் செயற்பாடுகள் எல்லாவற்றையும் வெல்லக்கூடிய விருட்சம் என்று முடியுமான இடங்களில் எல்லாம் சிலுவையை நாட்டுவார். உம் கண்டியில் கோவில் முற்றத்தில் மறைபணிக்குப் போகும் போதும் வரும் சிலுவை முன் சென்று வணங்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார். சகல கிறிஸ்தவர்களும் தமது வீடுகளில் சிலுவையை நாட்ட வேண்டும் என்று அவர் கற்பித்ததன் தாக்கம் இப்போதும் இருப்பதை அவதானிக்கலாம்.

### கன்னிமரியாள் மீதுள்ள பக்திமுயற்களில் விசேட நாட்டம்

பொதுவாக புனிதர்கள் வணக்கத்தில் நாட்டம் கொண்ட வாஸ் அடிகள் கன்னிமரியாள் மீது விசேட பற்றுதல் கொண்டிருந்தார். திருச்செபமாலையைப் பாடலாகப் பாடும் பழக்கத்தையும் கொண்டிருந்தார். இலங்கையில் கண்டியில் இந்தச் செபமாலையைப் பாடும் பழக்கத்தை ஏற்படுத்தினார். மற்றும் இலங்கையில் எல்லா ஆலயங்களிலும் கிறிஸ்தவர்கள் கூடுகின்ற நாட்களில் (குறிப்பா திருப்பலிக்கு முன் வந்து குருவானவர் வரும் வரை காத்திருக்கும் நேரத்தில் இன்னும் இப்பழக்கம் உள்ளமையை அவதானிக்கலாம்) செபமாலையையும், கிருபைதயாபர மந்திரத்தையும் ஓதக்கற்பித்தார். வழிப் பயணம் நடக்கும் வேளையில் (வன்னிக் காடுகளை ஊடறுத்து ஒரு ஊரிலிருந்து அடுத்த ஊருக்குச் செல்லும் போது) தமது துணை ஆட்களுடன் செபமாலை ஓதி யாத்திரையாவார். மற்றப் புனிதர்களுள் புனித சூசையப்பர் மீது அதிக பக்தியாய் இருந்தார். சனிக்கிழமை தேவதாய்க்கு ஒதுக்கியது போல



### கற்பு அடக்க ஒடுக்கம்

வாஸ் அடிகள் அடக்கம், தூய்மை ஆகிய புண்ணியங்களை மிகவும் எடுத்துக் காட்டான முறையில் பின்பற்றி வந்தார் பாவச்சோதனைகளை மேற்கொள்வதற்காக அடிக்கடி உபவாசம் இருப்பது மட்டுமல்ல தம்மைத் தாமே சாட்டையால் அடிப்பது, தமது குருத்துவ அங்கிக்குள்ளே (Cassock) ஒரு கடுமையான சாக்குத் துாணியினலான ஆடையை அணிந்திருப்பார். பெண்களுடன் பேசும் போதும் அவர்களுடைய பாவசங்கீர்த்தனம் கேட்கும் போது பார்வையை உயர்த்திப் பார்க்க மாட்டார். முன்னர் இவரது காலத்தில் இவருடன் கோவாவில் வாழ்ந்தவர்கள் இவர் எப்போது தமது கன்னித்தன்மையைப் (Virginal Onunce) பேணிக்காத்தவராகவும் அக்காலத்தில் கோவாவில் நிலவி வந்த உலகப் பராக்குகளுக்கும் பயனற்ற பொழுது போக்குகளுக்கும் இடம்கொடாதவராகவும் வாழ்ந்தார் என்பதற்குச் சான்றுபகர்ந்தனர்.

### எளிமை, தரித்திரம்(Simplicity, Poverty)

வாஸ் அடிகள் உடையிலும், உணவிலும் எளிமையைக் கடைப்பிடித்தார். அவர் அணிந்திருக்கும் குருத்துவ உடை (Cassock) பழையதாகி, கிழிந்து இனியும் ஒட்டுப்போட முடியாத அளவுக்கு வரும் போது தான் அதை மாற்றுவார். அவரது சபையின் அக்கால விதிமுறைப்படி ஒரு குரு இரண்டு அங்கி வைத்திருக்க அனுமதியிருந்தது. ஆனால் இவர் ஒரு அங்கி இனிமேல் பாவிக்க முடியாது எனும் நிலை வரும் போது தான் மற்றதை நாடுவார். அவர் கண்டியில் இருந்த போது குளிரில் இருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக கோவாவில் சிறைக் கைதிகளும், பிச்சைக்காரரும் பயன்படுத்தும் ஒரு தடிப்பான 'கம்பளி'யை பயன்படுத்துவார். கண்டியிலும் வேறு இடங்களில் இருந்த போது தம்மிடம் வரும் குருக்கள் தங்குவதற்காக விசாலமான அறைகளைக் கட்டி வைத்திருந்தார். ஆனால் இவர் தங்கும் அறை மட்டும் நீட்டி, நிமிர்ந்து படுப்பதற்கு மட்டும் போதுமான அறையாக இருக்கும். வெற்று நிலத்தில் ஒரு பாயை மட்டும் விரித்துப் படுப்பார். இவரது கடைசிக் காலத்தில் பலகை போட்ட கட்டிலில் படுத்தார். அதுவும் கரடுமுரடானதாய் இருக்கும்.

அவரது உணவும் மிகவும் எளிமையானது. சாதாரண ஏழை மக்கள் உண்ணும் விலை குறைந்த அரிசியைத்தான் சமைத்து உண்பார். வெறும் சோறும் தண்ணீரும் இவரது சாதாரண உணவு. எப்போதாவது இருந்துவிட்டு மீனும், கருவாடும் உணவுடன் சேர்ப்பார். யாராவது குருக்கள் இவரைச் சந்திக்க வந்தால் அல்லது இவர் எங்காவது குருக்களைச்சந்திக்கச் சென்றால் அப்போது மட்டும் கொஞ்சம் இறைச்சி உண்பார். வழமையாக ஒரு பாயில் உட்கார்ந்து சாப்பிடுவார். மதுபானம் ஒரு போதும் இவர் அரந்தியவரல்ல. மற்றக்குருக்களுடன் சாப்பிடும் போது தான் சாப்பாட்டு அறையில் சாப்பிடுவார். தனியாக இருக்கும் போது சமையலறைக்குச் சென்று சாப்பிடுவார். இவர் எளிமை, தரித்திரத்தை மிகவும் கவனமாகக் கடைப்பிடித்ததற்கு இன்னுமொரு காரணமும் இருந்தது.

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சியின் இறுதிக்காலங்களில் பணியாற்றிக் கொண்டிருந்த மறைப்பணியாளர்கள் மீதும், அவர்களுக்கு உதவியாயிருந்த மெலிஞ்சிமார், சங்கிடுத்தாம்மார், மூப்பர்கள் மீதும் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு போர்த்துக்கேய ஆட்சியாளர்களால் ஒரு விசாரணைக்குழு ஏற்படுத்தப்பட்டு முறைப்படியான விசாரணைகள் யாழ் குடாநாடெங்கும் இடம் பெற்றன. அப்போது சாதாரண கத்தோலிக்க மக்களின் குற்றச்சாட்டுக்கள் தமது குருக்களும் (பிரான்சிஸ்கன் சபையினரும், இயேசு சபையினரும்) அவர்களுடைய உதவியாளர்களும் (மெலிங்சிமார், சங்கிடுத்தாம்மார், மூப்பர்கள் போன்றோர்) தங்களைச் சுரண்டுவதாகவும், துன்புறுத்துவதாகவும், ஆலயக் கொடுப்பனவுகளைக் காரணம் காட்டி தமது வாழ்வாதாரங்களை அபகரிப்பதாகவும். தமது பிள்ளைகளை மறைக்கல்வி வகுப்புக்களுக்கென்று வரவழைத்து அவர்களிடம் கடுமையாக வேலை வாங்குவதாகவும் என்று பட்டியலிட்டார்கள். (Perniola, V., The Catholic Church in Sri Lanka, Portuguese Period, Vol.III, 1620-1658, (2nd. ed., Tisara Press, Colombo, 2003, docs.153-199, pp.365-445)

வாஸ் அடிகள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய 2 ½ வருடங்களும் இவற்றைப்பற்றி கேள்வியுற்றிருப்பார். எனவே அவர் கத்தோலிக்க மக்கள் மீது எந்தச் சுமையையும் சுமத்த விரும்பவில்லை. தமது பணிகளை இனாமாகவே செய்தார்.

திருப்பலி மற்றும் திருநாட்களுக்கு பணம் அறவிட்டவர் அல்ல. ஆயினும் பிற்காலத்தில் கொள்ளை நோய் அதனால் ஏற்பட்ட பஞ்சம், பசி போன்றவற்றின் மத்தியில் மக்கள் வாஸ் அடிகளாரதும் குருக்களதும் திருப்பணிகளுக்கு பணம் அல்லது பொருட்களைக் கொடுக்கும் போது இன்னலுற்ற மக்களின் தேவைக்கு அவற்றை பயன்படுத்தும் பாரம்பரியம் உருவானது. ஊர்களுக்குச் செல்லும் போது மக்கள் உண்ணும் உணவையே உண்டார். காணிக்கையாக ஏதாவது அரிசி அல்லது உணவுப் பொருட்கள் கிடைத்தால் அங்கேயே உள்ள சற்று வசதி குறைந்தவர்களுக்கு அல்லது மூப்பர் போன்ற பணியாளர்களுக்கு அவற்றைப் பிரித்துக் கொடுத்து விடுவார். 'பயணங்களிலேயே எளியவர்களைக் கண்டால் வழியுபகரணத்திற்கு வாங்கிய அரிசி எல்லாம் சற்றும் மிச்சம் வையாமல் அவர்களுக்கு கொடுத்து விடுவார் அவர்களுக்கு உதவுவதற்காகச் தமதானவர்களுக்கு குறையுமென்று விசாரிப்பவரல்ல. ஆனதினால் இந்தத் தயையின் பேரில் சருவேசுரன் அத்தியந்த மகிழ்ச்சியைக் காண்பித்து இப்படிப்பட்ட அந்தரங்களில் அதிசயவிதமாய் அவருக்குதவி பண்ணி வருவார்.'

### தாழ்ச்சி - புண்ணியங்களின் அரசி (Humility, Queen of All Virtues )

இறையரசைப்பரப்புவதற்கும், பிறர்நலத்தை முன்னிலைப் படுத்துவதற்கும் எப்போதும் முன்னுரிமை கொடுத்து வந்ததால் தன்னை ஒரு தாழ்ச்சியுள்ள கருவியாகவே பயன்படுத்தி வந்தார். இந்த நோக்கத்திற்காகத் தாம் எவ்வளவு சிறுமைப்பட்டாலும் அது அவருக்கு ஒரு பொருட்டாகப்படவில்லையென்று ஏற்கனவே பார்த்தோம். தமது தாழ்ச்சியின் வழியால் பிரச்சினைகளையும், சிக்கலான பிரிவினைகளையும் தீர்த்தார். அல்லது வரவிடாமல் தவிர்த்தார் என்று பார்த்தோம். கன்னடத்தில் பணியாற்றிய போது அவரது தாழ்ச்சியான செயற்பாடுகள் மற்றும் இலங்கையில் பணியாற்றிய போது வரவிருந்த ஆயர் பதவியைத் தவிர்த்தது இதற்கு முக்கிய உதாரணங்கள்.

சில்லாலையில் இருந்த போது அங்கிருந்த மூப்பருக்குப் பணிந்து அவர் மேற்கொள்ளும் மறைப்பயண ஒழுங்குகளின் படி சில இடங்களுக்கு அதிகமாகப் பயணம் பண்ண விரும்பினாலும் களநிலையை உணர்ந்த மூப்பர் சில வேளைகளில் ஆபத்துண்டு என்று மறுத்தால் அதற்குப்பணிந்து நடப்பார். இலங்கையில் 10 வருடமளவாகப் பணியாற்றி மூலை முடுக்கெல்லாம் சென்று வந்த அனுபவம் இருந்தாலும் மற்றக்குருக்களின் ஆலோசனை கேட்டு அதற்கு மதிப்பளிப்பார். சாதாரண மக்கள் கூறும் கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பார். செய், வா, போ, கொண்டு வா, கொண்டு போ என்று ஏவலைக்காட்டுகிற வசனங்களையும் ஒரு நாளும் இயம்பவில்லை. சில விடயங்களைக் இவராகச் சொல்லும் போது இது செய்தால் நல்லா இருக்கும். அதை விலக்கினால் உதாசீனமாகும் என்று தமது சித்தத்தை மாத்திரம் காண்பித்து வருவார்.

1697ஆம் ஆண்டுக்குப் பின் படிப்படியாக குருக்கள் வரத்தொடங்கியிருந்தார்கள் அவர்கள் அவரது ஆன்மீக முதிர்ச்சி. கல்வியறிவு, கடினமான பணி அனுபவம் எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு வாஸ் அடிகளைப் "பெரியசுவாமி" அல்லது "பெரியவர்" என்று கூப்பிட்டு வித்தியாசப்படுத்தப்பழகினார்கள் அப்போது அவர் மிகவும் வெட்கப்பட்டு எதுவும் சொல்ல முடியாது தாம் வயதினால் அல்லாமல் வேறொன்றினாலும் பெரியோன் அல்ல என்று கூறுவார்.

சில குறிப்பிட்ட பணிகளைச் செய்யும் போது மற்றவர்களை அப்பணிகளில் ஈடுபடுத்தி தமது பெயரில் அதிக பிரயாசத்தையும், பாரத்தையும் கைக்கொண்டு சங்கையையும் பேரையும் மற்றவர்களுக்குக் கொடுப்பார். தாமே செய்யக்கூடிய ஒன்றை ஒருக்காலும் மற்றவனுக்குக் கற்பியார்.

ஜோணை எப்போதும் அவருடைய வீட்டில் வளர்த்த பிள்ளையென்றாலும் எப்போதும் பரிசாரகனாகவும் இருந்தாலும் ஒருக்காலும் அவனைத்தமது பணிவிடைக்காரனென்று எண்ணாமலும் வசனியாமலும் சகோதரரென சொல்லி வருவார் தாம் எழுதிய நிருபங்களில் அவனுடைய பெயரைக் காட்ட வேண்டியவிடத்தில் சகோதரனான யுவான் வாஸ் என்று லேகிப்பார்.

ஒருக்காலும் வேறொருவன் தமது கால்களைக் கழுவச் சம்மதிக்கவுமில்லை, மற்றவன் தண்ணீர் வார்க்கக் கை கழுவவுமில்லை. ஒரு நாளும் தாம் இருக்கும் இடத்தில் வேறொரு குருவானவரையும் தூரத்தில் நின்று கூப்பிடவில்லை. ஆனால் மற்றவர்கள் இருக்கும் இடத்தில் தாமே போய்ச் சொல்ல வேண்டியதை அறிவிப்பார்.

(அடுத்த இதழிலும் தொடரும்)



## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=,
கலர் 7,500/=

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவியர் மற்றும் மறைமாவட்டக் குருக்களுக்கிடையிலான கலந்துரையாடல்



மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவியர் மற்றும் மறைமாவட்டக் குருக்களுக்கிடையிலான ஒரு பயனுள்ள கலந்துரையாடல் கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் வருகைதந்த அனைவரையும் வரவேற்றுப் பேசியதுடன் அன்றைய கலந்துரையாடலின் நோக்கத்தையும் தெளிவுபடுத்தினார். மறைமாவட்டத்தின் பல்வேறு தளங்களில் இருபால் துறவியர் ஆற்றும் அற்புதமான பணிகளுக்காக நன்றி தெரிவித்ததுடன் அவர்களின் பணிகளையும் அவர் பாராட்டினார்.

தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தனது நீண்ட நெடிய பணி வாழ்வு அனுபவத்திலிருந்து காத்திரமான பல கருத்துக்களை வெளிப்படுத்தினார். பின்னர் குருக்கள் மற்றும் துறவியர் தமது கருத்துக்களையும், பணி வாழ்வில் தாம் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகளையும் எடுத்துக்கூறினர். மறைமாவட்டத்தின் மேய்ப்புப் பணி சார்ந்த முயற்சிகளுக்கு அனைவரும் கரம்கோர்த்து செயலாற்றுவோம் என்னும் முடிவோடு இக்கலந்துரையாடல் நிறைவுபெற்றது.

# தனிப்பங்காக உதயம் பெறும் பாதையில் மடுறோட் புனித சிந்தாத்திரை மாதா ஆலயம்

மன்னார் மறைமாவட்டத்தின் பிரதான யாத்திரைத் திருத்தலமான மடுத்தேவாலயத்திற்குப் போகும் பாதையை சுட்டிக்காட்டும் இடத்தை அண்டிய (பிரதேசத்தை மடுறோட் கிராமம் என அழைக்கப்படுகின்றது. இக்கிராமத்தின் மையப்பகுதியில் அழகிய புனித சிந்தாத்திரைமாதா ஆலயம் காட்சியளிக்கின்றது. இவ்வாலயத்தை பிரதான ஆலயமாகக் கொண்டு புத்தம்புது துணை ஆலயங்கள் மூன்றை உள்ளடக்கி புதிய தனிப்பங்காக மடுறோட் பங்கு உதயமாகி வருகின்றது.

இயற்கை எழிலும், அழகிய காட்டுப் பகுதியும் தெளிந்த நீரோடையும் ஓடிக்கொண்டிருக்கும் ஓர் அழகான கிராமம் மடுறோட் கிராமமாகும். இக்கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள புனித சிந்தாத்திரை மாதா ஆலயம் தொடக்க காலங்களில் குடியிருந்த திரு.ப. யோவான் அவர்களால் சிறிய கொட்டிலாக கட்டப்பட்டு வழிபாடுகள் நடாத்தப்பட்டு வந்தது. பிற்பட்டகாலத்தில் மடு பரிபாலகர்களாய் இருந்த குருக்கள் கல்லால் ஒரு சிற்றாலயத்தைக் கட்டி மடுத்தேவாலயத்தின் துணை ஆலயமாக இயங்கி வந்தனர். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# அளவக்கைப் பங்கில் தையல் பயிற்சி





இந்தியாவிலிருந்து வருகை தந்து அளவக்கைப் பங்கின் வாழ்க்கைப்பெற்றான் கண்டல் கிராமத்தில் கடந்த 12 வருடங்களாக பல்வேறு ஆன்மீகப் பணிகளை ஆற்றிவரும் புனித அமலோற்பவ மாதா சபைக் கன்னியர்களால் (சி.ஜ.சி) தற்பொழுது மேற்படி கிராமத்தில் தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு மாசி மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சியானது அருட்சகோதரி ஸ்ரெல்லா அவர்களின் வழிகாட்டலில் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன் இதில் இணைந்து பயன்பெற ஆர்வமுள்ள பெண்கள் இதில் இணைந்து பயன்பெறலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

*தகவல் : அருட்சகோதரி சசிகலா.*

# காணி அபகரிப்புக்கு எதிராக குரல் கொடுப்பதில் குருக்களின் ஆதரவு









கேப்பாவுலவு காணி மீட்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவும் மன்னார் முள்ளிக்குள கிராம மக்களின் காணி அபகரிப்புக்கு எதிராகவும் மன்னார் மாவட்ட சிவில் அமைப்பு முருங்கன் பஸ் நிலையத்தில் நடாத்திய சத்தியாக்கிரக போராட்டத்திற்கு முருங்கன் மறைக்கோட்ட குருக்கள் பங்கெடுத்து தம் ஆதரவை நல்கியுள்ளனர்.


இத்துடன் இன்னும் சில குருக்கள் கேப்பாவு குடியிருப்பில் மக்கள் நடாத்திய காணி மீட்பு போராட்டத்திற்கு நேரடியாக சென்று தங்களுடைய ஆதரவினை தெரிவித்திருந்ததுடன் 23.03.2017 தொடக்கம் முள்ளிக்குள மக்கள் மேற்கொள்கின்ற தொடர் காணி மீட்பு சத்தியாக்கிர போராட்டத்திலும் குருக்கள் துறவிகள் பங்கெடுத்து மக்களோடு தம் உடனிருப்பை பகிர்ந்துகொண்டனர்.

# மாகாண முதல்வர் வருகை



லியோன்சின் புனித வளனார் சபை அருட்சகோதரிகளின் இந்திய மாகாணத்தலைவி அருட்சகோதரி எமிலி யோசப் (SJL) அவர்கள் உயிலங்குளம் நொச்சிக்குளத்திலுள்ள தங்களுடைய சபைக் கன்னியர்களை பார்வையிட்டதுடன், இந்தியாவுக்கு செல்வதற்கு முன்பாக அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களை சந்தித்து தங்கள் சபைப்பற்றி உரையாடினார்.

# கருக்கலைப்பு சட்டத்திருத்தத்துக்கு கண்டனம்



இலங்கையில் கருக்கலைப்பை மேற்கொள்ளக் கூடியதான குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களை செய்ய நீதியமைச்சு தயாராகி வருவதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். குறித்த திருத்தங்களை முன்வைப்பதற்காக உயர்நீதிமன்ற நீதியரசரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பீ. பி. அலுவிஹார தலைமையில் அமைக்கப்பட்ட குழுவை உடனடியாக கலைக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன். எமது தாய் நாட்டின் கலாசாரத்தையும், அதன் கௌரவத்தையும் சீரழிக்கும் வகையில் அமையப்போகும் இச்சட்டத்தினால் எமது தாய் நாடு இறைசாபத்திற்கு உள்ளாகப்போவது உறுதி.

இவ்வுலகில் வாழும் உயிரினங்களுள் மனிதன் மட்டுமே தன் இனத்தை கருவிலிருந்தே அழிக்க முற்படுகின்றான். கருக்கலைப்பை மேற்கொள்ளக் கூடியதான குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதைவிட அதற்கு மாற்றீடாக வேறு ஒரு பொறிமுறையை மேற்கொள்வது சிறப்பானதாகவும் நன்மையானதாகவும் அமையும்.

இக் குற்றவியல் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்படுமாயின் அரசாங்காகமே கருக்கலைப்பை ஊக்குவிப்பதாக அமையும் எனவே இவ் முயற்சியை உடனடியாக கைவிடும்படி கேட்டுக்கொள்கின்றேன். இது தொடர்பான எமது கருத்தினை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மற்றும் நீதியமைச்சுக்கும் கடிதம் மூலம் அனுப்பிவைத்துள்ளோம்.

# பேராலயப்பங்கின் மகா ஞானொடுக்கம் பல வெற்றிகளுடன் நிறைவு



“இதோ நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்” (தி.வெ 21:15) எனும் மையப்பொருளில் அமலமரி தியாக சபை குருக்கள் மன்னார் தூய செபஸ்ரியார் பேராலயத்தில் தை மாதம் 22ஆம் திகதி முதல் மாசி மாதம் 26ஆம் திகதி வரை 36 நாட்கள் மகா ஞானொடுக்கத்தை நடாத்தினார்கள். பேராலய பங்கில் உள்ள 13 வலயங்களும் 6 பகுதியாக பிரித்து ஒரு பிரிவுக்கு ஒரு குரு பொறுப்பு எனும் வகையில் தங்களுடைய பணிகளை ஆற்றினார்கள். குடும்பங்களை சந்திப்பதும் பேராலயத்தில் மூலை முடுக்கு எங்கும் நற்செய்தியை அறிவிப்பதும் இவர்களின் முக்கிய பணியாக அமைந்தது.

இந்த நாட்களில் மரியன்னை ஆலய நவநாட்கள் இடம்பெற்றதால் நவநாள் வழிபாடுகளையும் மறையுரைகளையும் இவர்களே தலைமையேற்று வழிநடாத்தினார்கள். இவர்களின் மறையுரைகள் மக்கள் மனதை பெரிதும் தொடுவதாக அமைந்ததோடு மக்களுடைய பாராட்டையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. திருவிழா திருப்பலியானது அமலமரி தியாகிகளின் யாழ் மாகாண முதல்வர் அருட்பணி எட்வின் வசந்தராஜா அமதி அவர்கள் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. மரியன்னை ஆலய திருவிழாவின் பின் வலய திருப்பலிகளுக்கு முக்கிய கவனம் செலுத்தி தினமும் நான்கு வெவ்வேறு இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ப வெவ்வேறு தலைப்புக்களில் திருப்பலி மையப்படுத்தப்பட்டது. சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மாலையில் சிறுவர், இளைஞர், திருமணமானோர், முதியோர், மற்றும் இறைவார்த்தை, திருவருட்சாதனங்கள், தேவ அழைத்தல் போன்ற பல தலைப்புகளில் கருத்தமர்வுகள் நடாத்தி புதிய பல விடயங்களை கூறியதுடன் மக்களின் பல்வேறு சந்தேகங்களையம் தீர்த்து வைத்தனர். ஒவ்வொரு வலயங்களிலும் வெவ்வேறு நாட்களில் அன்பு விருந்து தயார்செய்து மக்களை ஊக்குவித்தனர். இவ்விருந்து மக்கள் ஒன்றிணைவதற்கும், ஒருவர் ஒருவரை தெரிந்து புரிந்து கொள்வதற்கும், பகிர்வதற்கும் கூடி மகிழ்வதற்கும், பாராட்டப்பட்டது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)




# தவக்காலச் சிறப்பிதழ்



## சாம்பலால் சுய ஆய்வு

**– திருமதி. A. ஆபிரகாம் சோசை, வங்காலை –**





"நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" (தொ.நூல் 3:19)

மனிதன் தான் தான் எல்லாம் நான் சொல்வதெல்லாம் சரி என்று தன் குரலை ஓங்கி ஒலித்து, தன்னை உயர்த்திப் பிடித்து, அகங்காரத்தோடும், ஆணவத்தோடும் வாழ்கின்றான் அவனுடைய வெறுமையையும், ஒன்றுமில்லாத்தனத்தையும் மனித வாழ்வில் நிலையாமையையும் சுட்டிக்காண்பித்து தாழ்ச்சி மிக்க வாழ்விற்கு அழைக்கிறார் இறைவன்.

மனிதன் தனக்குள் செல்கின்ற பயணம் தான் உலகிலேயே மிக நீண்ட பயணம் தடம் மாறிச் செல்லும் தன் வாழ்வைத் தடுத்து நிறுத்தி, தன்னையே சுய ஆய்வு செய்து, சரியான வழியில் நடை பயில்பவனே ஒரு சிறந்த மனிதன் இப்படிப்பட்ட சுயஆய்விற்கு திருச்சபை வழங்குகின்ற காலம் தான் தவக்காலம். இந்த சுயஆய்விற்கு உதவியாக நம்மை சிந்திக்க அழைப்பது விபூதிப் புதனன்று நம் நெற்றியில் இடப்படும் சிலுவையடையாளமான சாம்பல் "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்"

பழைய ஏற்பாட்டு நூல்களில் சாம்பல் துக்கத்தின் அடையாளமாகக் காட்டப்படுகின்றது. 2சாமு 13:19இல் தாமார் தன் துக்கத்தை வெளிப்படுத்த தன்மீது சாம்பலை வாரித் தூவுகின்றார். எஸ்தர் 4:1இல் மொர்தக்காய் துக்கத்தை வெளிப்படுத்த சாம்பலைத் தன்மேல் தூவிக் கொள்கின்றார். மனிதன் தன்னுடைய பலவீனத்தின் காரணமாகக் கடவுளுக்கு எதிராச் செல்வதை உணர்த்தி, அந்தப் பாவங்களுக்கு துக்கப்படுவது அவசியம் என்பதை சாம்பல் எடுத்துரைக்கின்றது. பாவங்களுக்காகத் துக்கப்படுவது மட்டும் போதாது. கடவுளை நோக்கித் திரும்பி வருவது அவசியம் என்பதையும் சாம்பல் உணர்ந்துகின்றது. (யோனா 3:6 "அவன் தன் அரியனையை விட்டிறங்கி, அரச உடையைக் களைந்து விட்டு, சாக்கு உடை உடுத்திக் கொண்டு, சாம்பல் மீது உட்கார்ந்தான்"

நினிவே நகர மக்கள் மனம் திரும்பி வருவதன் அடையாளமாக சாம்பலில் அமர்கின்றனர். (எரே 6:26) "என் மக்களே சாக்கு உடை உடுத்துங்கள் சாம்பலில் புரளுங்கள்" என்பது மனமாற்றத்திற்கான இறைவனின் அழைப்பாக இருக்கின்றது எனவே நமது மனமாற்றம் பல்வேறுபட்ட உறவுகளை சரி செய்யக் கூடிய நோக்கில் வாழ்வு மாற்றத்தின் பாதையில் இருக்க வேண்டும் என்பதை காண்பிக்கிறது.

மனிதன் தன்னோடு உறவை சரிப்படுத்த வேண்டும் (எபே 4.20:23) உங்களுடைய முந்திய நடத்தையை மாற்றி தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக்கு குரிய இயல்பைக் களைந்து விடுங்கள். உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும். புதிய மனிதருக்குரிய இயல்பு உண்மையான நீதியிலும், தூய்மையிலும் வெளிப்படும்.

ஊனியல்பின் செயற்பாடுகள் குடிவெறி, களியாட்டம், கெட்டநடத்தை, ஒழுக்கக் கேடான வாழ்வு (கலா 5.19:21) மூலம் மனிதன் தன் உடலுக்குத் தீமை இழைப்பது மட்டுமல்லாமல் தன்னிலிருந்து அந்நியப்பட்டு வாழ்கின்றான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நோன்பின் மூலம் தன்னோடு உள்ள உறவைச் சரிப்படுத்த மனிதன் அழைக்கப்படுகின்றான் ஒரு நேர உணவை விட்டுவிடுவது, மாமிச உணவைத் தவிர்ப்பதும் மட்டுமல்ல, மேற்கூறிய தீமைகளை விட்டுவிடுவதும், மதுவுக்கு செலவிடும் பணத்தை பசிபட்டினியாயிருக்கும் ஏழைக்கு வழங்குவதும் நோன்புதான்.

மனிதன் மனிதனோடு உறவைச் சரி செய்ய வேண்டும் "உங்களுள் ஒருவர் மற்றவரைப் பழித்துரைக்க வேண்டாம்" என்கிறது இறைவார்த்தை (யாக் 4.11:12) அடுத்தவரைத் தப்பாகப் புரிந்து கொண்டால் இதோ, "எதைப்பற்றியாவது நீங்கள் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தால் அதைப்பற்றிய உண்மையைக் கடவுளே உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

(பிலிப் 3:15) உனது வாயின் வார்த்தைகளால் அடுத்தவன் உள்ளம் உடைந்து இதயம் காயப்பட்டிருக்க, உள்ளம் நொறுங்கியவரைக் குணமாக்க அனுப்பப்பட்ட ஆண்டவரே இரக்கமாயிரும் என்று எப்படிச் சொல்ல முடியும்? அடுத்தவனைப் பற்றி அவதூறு பேசுவதும், அவமானப்படுத்துவதும், பழிவாங்குவதுமாகிய செயற்பாடுகளில் இருந்து விடுபட்டு நம்மையே நாம் சுயஆய்வு செய்து, கிறிஸ்துவுக்காக வாழ்வது இந்நாட்களில் செய்யப்படும் பெரிய நோன்பு வீண் பெருமையைத் தேடாமலும், ஒருவருக்கு ஒருவர் எரிச்சல் ஊட்டாமலும், ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படாமலும் இருப்போமாக. (கலா 5:26)

நாவடக்கம் மிகப்பெரிய நோன்பு சிறியதொரு தீப்பொறி எத்துணை பெரிய காட்டை கொழுத்தி விடுகிறது நாவும் தீயைப் போன்றதுதான் நெறி கெட்ட உலகின் உருவே அது (யாக் 3.9:10) தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவது அந்நாலே கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதனைத் தூற்றுவதும் அந்நாலே. போற்றலும், தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. இப்படியிருத்தலாகாது என யாக்கோபு எச்சரிக்கின்றார்.

மனிதன் இறைவனோடு உறவைச் சரிப்படுத்த வேண்டும் இறையன்பும், பிறரன்பும், தூய்மையும், தாழ்மையும் கொண்டவர்களாய் நாம் வாழுவதைத் தான் இறைவன் விரும்புகின்றார். (ஒசேயா 6:6 உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகின்றேன்"

கிறிஸ்தவ வாழ்க்கைக்குரிய ஒழுங்குகளை நாம் கடைப்பிடித்து வாழ்ந்தால் இறைவனோடு உறவை வளர்க்க முடியும் (உரோ 12.9:21) சுயஆய்வு செய்து நம்மை நாம் மாற்றுவோம். இறைவனின் ஒளியைப் பெற்று, அவரோடு ஆழமான நட்புறவு கொள்ள நம்மைத் தயாரிக்க செபம் என்னும் கருவியை கையிலெடுப்போம்.

ஆண்டவரிடம் பற்றுறுதி கொண்டு வாழும் போது எந்த சோதனைகளையும் எதிர்கொள்ள முடியும். சீராக் நூல் 2ஆம் அதிகாரம் தெளிவாகக் கூறுகின்றது. துன்புறும் கிறிஸ்துவின் முன்மாதிரியை (1பேது 2.18:24) பின்பற்றி நம் வாழ்வில் வரும் துன்பங்களை ஏற்றுக்கொள்வோம். உளி அடிபட்டால் தான் கல் சிற்பமாக முடியும். காய்க்காத மரம் கல்லெறிக்குத் தப்பிவிடும். கனி கொடுக்கும் மரங்களாக வாழ்கின்றவர்களுக்கு துன்பங்கள், சோதனைகள் வருவது நியதி (1பேதுரு 5:8 அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள் உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போலத் தேடித் திரிகிறது. இந்த அலகை யார் வடிவிலும் வரலாம். எனவே அசையாத நம்பிக்கை கொண்டவர்களாய் அதனை எதிர்ந்து நிற்க, நமக்காக அவமானப்பட்டு நிந்தனைகளை ஏற்றுக்கொண்டு சிலுவையில் மரணித்து உயிர்த்த இயேசுவின் வல்லமையைக் கேட்போம் சிலுவையைச் சுமந்தால் தான் சிகரத்தைப்பிடிக்க முடியும் உண்மையான நேர்மையான ஒரு பணியாளனின் வாழ்வில் வரும் சோதனை சாதனையாகலாம் தடைக்கற்கள் படிக்கற்களாக மாறும் துன்பங்கள் "சிலுவையினால் வரும் மகிழ்ச்சி ஆகும்.

ஆவியின் துணையோடு துன்பத்தை சந்திக்கின்ற மக்கள் புதுவாழ்வோடும், மகிழ்ச்சியோடும் வெளியே வருகின்றனர். ஆவியில் துணையில்லாமல் சோதனை, துன்பங்களை சந்திக்கின்றவர்களுக்கு கிடைப்பதோ வெறுமையான மன நிலையும் சோர்வும் தான் என்பது நமது அன்றாட வாழ்க்கை அனுபவமாகும். எனவே சாம்பல் வழி எமது வாழ்வை சுயஆய்வுக்கு உட்படுத்துவோம் அருளின் காலத்தை முற்றும் பயன்படுத்துவோம்.

## கத்தோலிக்கர்கள் மேல் நீதிமன்றத்தின் வழியாக வருடத்திற்கு 350ற்கும் மேல் விவாகரத்து பெற்றுக் கொள்கின்றனர்

### கிறிஸ்தவ குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை கர்தினால் ஆண்டகை எடுத்துக்கூறினார்




எமது கிறிஸ்தவ குடும்ப வாழ்வில் பலவிதமான குழப்ப மிக்க தன்மை ஏற்பட்டுள்ளது. 1960ஆம் ஆண்டு மற்றும் 70ஆம் ஆண்டுகளில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள குடும்ப நீதிமன்றத்திற்கு வருடாந்தம் 10 குடும்பங்கள் மட்டுமே விவாகரத்துப் பெற வருகை தந்தனர் ஆயினும் தற்போது இந்நிலை 350ஆக உயர்வடைந்துள்ளது. கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ஆண்டகை 26.02.2017 அன்று ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பு தம்மிட்ட தோமஸ் கருதினால் குரே மறைக்கல்விப் பணியகத்தில் நடைபெற்ற குடும்ப ஒன்று கூடலின் போது இக்கருத்தை தெரிவித்தார்.

மேலும் கூறுகையில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ குடும்பங்களை வலிமைமிக்கதாக கட்டியெழுப்புவதை நோக்கமாக கொண்டு மறைமாவட்டம் முழுவதும் வட்டாரப் பங்கு மட்டத்தில் குடும்ப பணிக்குழு ஒன்றை நியமிக்கும் வேளைத்திட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் கட்டளை வட்டாரங்களில் உள்ள பங்குகளில் தெரிவு செய்யப்பட்ட தம்பதியர்கள் பெரும் எண்ணிக்கையானோர் இது பங்குத்தந்தையின் மேற்பார்வையின் இதில் கலந்து கொண்டனர். இதன் போது அவர் மேலும் கருத்து தெரிவித்து கூறியபோது எமது மறைமாவட்டத்தில் ஒரு குடும்பமாயினும் அழிந்து போக இடம் கொடுக்காமல் இறைத்திட்டத்திற்கு ஏற்ப வழிமை மிக்க குடும்ப வாழ்வு வாழ அவர்களை வழிநடத்துவது இச்செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பங்குகளில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களின் ஊடாக ஏனைய குடும்பங்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த கட்டியெழுப்ப இந்த செயற்த்திட்டத்தின் கூடாக எண்ணுவதாகவும், மேலும் கொழும்பு உயர் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பணிகளில் அருட்பணி. குலாட் நோனிஸ் அடிகள் நீர்கொழும்பு வட்டார இயக்குனர் மற்றும் கட்டுவப்பிட்டிய பங்குத்தந்தை அருட்பணி ஸ்ரீலால் பொன்சேக்கா அடிகள், தில்லந்துவை பங்குத்தந்தை அருட்பணி ருவின் சந்தசிறி அடிகள், சீதுவை பங்குத்தந்தை என்டன் பிரேமலால் அடிகள், மற்றும் ஏனைய குருக்களோடு தம்மிட்ட மறைகல்வி பணியகத்தின் இயக்குனர் அருட்பணி. சிஸ்வான் த குருஸ் அடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

## மேய்ப்புப்பணியில் குடும்பவாழ்வுக்கு முன்னுரிமை இந்திய ஆயர்கள் தீர்மானம்

திரு அவை மற்றும் குடும்பங்களின் உறவுகளிலிருந்து பிரிந்து வாழும் மக்களுக்கு, மேய்ப்புப்பணியில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்கு, இந்திய ஆயர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்திய இலத்தீன் வழிபாட்டுமுறை ஆயர் பேரவையின் 29வது நிறையமர்வு கூட்டத்தின் இறுதியில், அறிக்கை வெளியிட்ட ஆயர்கள், திருமண உறவு முறிந்த நிலையில் வாழ்கின்ற மக்களுக்கு, மேய்ப்புப்பணியில் உடனடியாக அக்கறை காட்டப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர்.

குடும்பங்களில் அன்பின் மகிழ்வை ஊக்குவித்தல் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருதூது அறிவுரை மடலின் (Amoris Laetitia) அடிப்படையில், கத்தோலிக்கக் குடும்பங்கள் உயிரூட்டம் பெறுவதற்கான வழிகளை ஆராய்ந்த ஆயர்கள், குடும்பக் கட்டுப்பாடு போன்ற விவகாரங்களில், கத்தோலிக்கப் போதனைகளிலிருந்து, குடும்பங்கள் விலகிச் செல்கின்றன என்றும் கூறியுள்ளனர்.

கடும் வறுமையில் வாழும் குடும்பங்கள், இருவேறு மதங்களைச் சேர்ந்த தம்பதியர், பெற்றோரில் ஒருவரை மட்டும் கொண்டுள்ள குடும்பங்கள், மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் உள்ள குடும்பங்கள், துன்புறும் குடும்பங்கள், குடியேற்றதாரர், நோயாளர், மற்றும் வயது முதிர்ந்தவர்களைக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு, திருஅவையின் ஆதரவு மிகவும் தேவைப்படுகின்றது என்றும், ஆயர்கள் தெரிவித்துள்ளனர்.



## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**

கறுப்பு வெள்ளை 4,500/=,


கலர் 7,500/=

# மன்னார் மறைமாவட்டமும் தூய யோசவ்வாஸ் அடிகளாரும்

## கட்டுரைத் தொடர் – 2

- அருள்தந்தை. ம. க. அருள்பிரகாசம் -

## பறப்பாங்கண்டல்



1702–1703 ஆண்டுகளில் மீண்டும் மாதோட்டத்தில் வாஸ் அடிகளார் பணியாற்றியுள்ளார். இக்காலத்தில்தான் பறப்பாங்கண்டல் ஆலயத்தின் முழு விபரங்களையும் அறிந்து அவ்வாலயத்தில் தங்கியிருந்து மாதோட்டப் பகுதிகளில் மூப்பர்கள், அண்ணாவிமார்கள், சங்கிடுத்தான்மார், மறையாசிரியர்கள் போன்றோரை உருவாக்கி, சிற்றாலயங்கள் பல அமைத்து பணித்தளத்தை விரிவுபடுத்தினார்.

1704ஆம் ஆண்டு அருட்தந்தை சல்டானோ அவர்கள் கோவா பேராயரிடம் இருந்து யூபிலி கடிதம் கொண்டுவந்தார். அந்த யூபிலி விழாவை யோசப்வாஸ் அடிகளார் பறப்பாங்கண்டல் பெரியகோவில் என அழைக்கப்படும் பரலோக மாதா கோவிலில் கொண்டாடினார். அந்நிகழ்வின் அடையாளமாக உயிர்த்தராசன்குளத்திலிருந்து பறப்பாங்கண்டலூடாக வட்டக்கண்டல்வரை (கட்டுக்கரைக்குளத்தடி) யூபிலி றோட் அமைக்கப்பட்டுள்ளது. மாதோட்டத்திற்கு பொறுப்பாயிருந்த அருட்தந்தை பெறாவோ அடிகளார் சுகவீனமுற்று இருந்தவேளை மீண்டும் மாதோட்டத்திற்கு வருகைதந்து கிராமம் கிராமமாகக் கால்நடையாகச் சென்று திருப்பலியும் திருவருட்சாதனங்களும் நிறைவேற்றினார்.

பறப்பாங்கண்டல் பெரிய கோவிலானது ஒரேற்ரோறியன் குருக்களின் ஒரு பழைய பணித்தளமாகும். இது மன்னார் வீதியில் இருந்து சில கல் தொலைவில் உயிலங்குளத்திற்கும் உயித்தராசன்குளத்துக்கும் இடையில் வடக்குப் பக்கம் அமைந்துள்ளது. இது போத்துக்கேயர்களால் கட்டப்பட்ட ஒரு பழைய ஆலயமாகும். இது ஒரேற்ரோறியன் குருக்கள் வருவதற்கு முன்னரே கட்டப்பட்டதொன்றாகும். பிரான்சீஸ்கன் சபைக் குருக்களால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த ஆலயமாகும். தூய யோசப்வாஸ் அடிகளார் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மாதோட்டம் வன்னிப் பகுதிகளுக்கான (வடக்குப் பகுதி) மறைப்பணியை இங்கு தங்கியிருந்து போய் பணியாற்றி வந்தார். ஒரேற்ரோறியன் குருக்கள் தமது வருடாந்த ஞான ஒடுக்கத்திற்காகவும் ஏனைய கூட்டங்களுக்காகவும் இவ்விடத்தில் அடிக்கடி ஒன்றுகூடுவர் என சுவாமி ஞானப்பிரகாசர் தனது "யாழ் மறைமாவட்டத்தின் 25 வருட கத்தோலிக்க வளர்ச்சி" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

புனித யோசப்வாஸ் அடிகளார் ஏனைய குருக்களுடன் சேர்ந்து இந்தப்பிரதான ஆலயத்தில் தங்கியிருந்து மன்னார் மாதோட்டப் பகுதிகளிலுள்ள எல்லாக் கிராமங்களையும் தரிசித்து அருட்சாதனங்கள், திருப்பலிகள் நிறைவேற்றி கத்தோலிக்க விசுவாசத்தில் இறைமக்களை வளர்த்தெடுத்தார். பெரிய கோவிலென அழைக்கப்படும் இவ்வாலயம் 400 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட ஒரு பெரிய ஆலயமாகும்.

யோசப்வாஸ் அடிகளாரின் காலத்தில் இலங்கையிலிருந்த ஒரேற்ரோறியன் சபை மறைத்தூது பணியாளர்களின் மத்திய நிலையமாக இவ்வாலயம் காணப்பட்டது. இவ்வாலயத்திலேயே 1705ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 9ஆம் திகதி இலங்கையை 8 பிரிவுகளாகப் பிரித்து பணிப்பொறுப்பை 8 மறைபணியாளர்களிடம் கையளித்தார். கி.பி 1750 தொடக்கம் 1795 வரை இலங்கையின் பிரதான தேவாலயமாக இவ்வாலயம் விளங்கியதென்பது ஒரு சிறப்பான வரலாற்றுப் பதிவாகும்.

ஆலயத்திற்குப் பின்புறம் 6 அறைகள் காணப்படுகின்றன. இங்கேதான் தூய யோசப்வாஸ் அடிகளாரும் ஏனைய ஒரேற்ரோறியன் குருக்களும் வந்து தங்கி மாதோட்டப்பகுதிகளிலும் வன்னிப்பகுதியில் பணியாற்றினர்.

இவ்வாலயமானது போர்ப் பிரதேசத்தில் 30 வருடங்களுக்கு மேல் இருந்தபோதிலும் முழுமையாகப் பாதிப்படையாது புனிதரின் பணியின் மகத்துவத்தை இன்றுவரை எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றது. இவ்வாலயமானது பரலோக மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயமாகும். அருட்தந்தை பெட்றே பெராஓ, அருட்தந்தை யாக்கோமே கொன்சால் வாஸ், அருட்தந்தை யோசப் மெனென்ஸ் போன்ற பிரதான ஒரேற்ரோறியன் குருக்கள் தங்கிப் பணியாற்றிய ஆலயமாகும். இங்கிருந்துதான் யாக்கோமே கொன்சால் வாஸ் அடிகளார் வியாகுல பிரசங்கத்தை எழுதினார். அவரால் வரையப்பட்ட வியாகுல பிரசங்க படங்கள் தற்போது கன்னாட்டி கத்தர் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டு பறப்பாங்கண்டல் கூட்டத்து மாதா கோவிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் பதிவுசெய்யப்பட்ட திருமுழுக்குப் பதிவுப் புத்தகம் கோவா நகரிலிருந்து எடுத்துவரப்பட்டு இங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

நீண்ட காலத்திற்குப் பின்னர் இவ்வாலயம் புனித யோசப் வாஸ் குழுவினரின் ஒத்துழைப்பில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. யோசப்வாஸ் அடிகளாரை புனித நிலைக்கு உயர்த்துவதற்கு முயற்சிகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு மாதத்திற்குள் ஆலயத்தினுள் புதிய நீரூற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்நீர் ஊற்று மிக வரட்சியான நாட்களிலும் வற்றாமல் உள்ளது. கேள்விப்படும் பலரும் வந்து அந்நீரை அருந்தி உடலில் பூசி குணம்பெற்று வருகின்றனர். புனர்நிர்மானம் செய்யப்பட்ட இவ்வாலயம் 2017ஆம் ஆண்டு தை மாதம் 16ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்கப் பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. அத்தோடு புனிதரின் திருவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



## கள்ளிக்குளம் தூய யோசவ்வாஸ் சிலுவை



பெரியகுஞ்சுக்குளப் பங்கிலே பெரியமுறிப்பு என்னும் கிராமத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவில் கள்ளிக்குளம் எனும் கிராமம் உண்டு. அக்கிராமத்திலே யோசவ்வாஸ் அடிகளார் சிலுவை ஒன்று நாட்டியுள்ளார் என மக்கள் நம்புகின்றனர். இப்பகுதிக்கு வேட்டையாடச் செல்பவர்களும், நோயினால் பாதிக்கப்படுபவர்களும் ***சம்மனசுச் சுவாமி*** நட்ட சிலுவை எனக்கூறி அந்தச் சிலுவையின் பகுதிகளை சிறு சிறு துண்டுகளாக வெட்டி அத்துண்டுகளை உரசி நீரில் கரைத்து நோயுள்ள இடங்களில் பூசியும், குடித்தும் குணம் பெற்றுள்ளதாக அப்பங்கு மக்கள் தெரிவித்தனர். ஆரம்ப காலத்தில் ஐந்து குடும்பங்கள் விவசாயம் மற்றும் தோட்டம் செய்வதற்காகக் குடியேறி வாழ்ந்தனர். இவர்கள் 1990ஆம் ஆண்டுவரை அங்கு வாழ்ந்தனர். பின்னர் யுத்த சூழ்நிலை காரணமாகத் தமது சொந்தக் கிராமங்களான பெரியமுறிப்பு மற்றும் பெரியகுஞ்சுக்குளம் ஆகிய இடங்களிற்கு வந்து குடியேறிவிட்டனர். தற்போது அக்கிராமம் ஒரு அடர்ந்த காடாகக் காட்சியளிக்கின்றது. தூய யோசவ்வாஸ் அடிகளார் நாட்டிய சிலுவையின் அடிப்பகுதி இன்னும் அழியாமல் இருக்கின்றது. அச்சிலுவைக்கு அருகாமையில் வேறு ஒரு சிலுவை மக்களால் நாட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அருட்தந்தை ஸ்ரீபன் அடிகளார் பங்குத்தந்தையாக இருந்த காலத்தில் அதைப் பராமரிக்க ஆவனசெய்துள்ளார். நான் பெரியமுறிப்பு மூப்பருடன் சென்று அவ்விடத்தைப் பார்வையிட்டேன். யானை மற்றும் மான்கள் போன்றவற்றை அப்பகுதியில் காணக்கூடியதாக இருந்தது. அருட்தந்தை ச. செபமாலை அடிகளார் பெரியகுஞ்சுக்குளப் பங்கின் தூய யோசவ்வாஸ் இளைஞர் மன்றத்தினருடன் சென்று அவ்விடத்தில் திருப்பலி நிறைவேற்றியுள்ளார்.

குடும்பியர் என அழைக்கப்படும் வைத்தியரது பிறப்பிடம் பெரிய முறிப்புக்கு அருகாமையிலுள்ள கள்ளிக்குளமாகும். குடும்பி வைத்தியரின் மகன் பிறஞ்சி என்பவர் சித்த ஆயுள்வேத வைத்தியராவார். இவர் நோயுற்ற எல்லோரையும் மிகவும் அன்பாக அணுகி அவர்களின் மனதைத் தேற்றி வைத்தியம் பார்த்து வந்ததால் சீனியர் - சீனி வைத்தியர் என அழைக்கப்பட்டார். இவரது மகன் சிமியோன் ஐயம்பிள்ளை என்பவர் சித்த மருத்துவராவார். இவர்கள் குடும்பத்தினர்தான் கள்ளிக்குளத்தில் நீண்டகாலமாக வசித்து வந்தவர்களாவர்.

புனித யோசவ்வாஸ் அடிகளாரை இவர்களது முன்னோர் சந்தித்ததாகவும் அவர் கள்ளிக்குளத்தில் அத்திமரத்தடியில் சிலுவை நாட்டியதை அறிந்தவர்களாகவும் உள்ளனர். அச்சிலுவை நாட்டிய இடத்திற்கு அடிக்கடி சென்று சிலுவையை ஆராதித்து தமது வைத்தியத்தை தொடர்பவர்களாக இன்றுவரை விளங்குகின்றனர். அந்த அத்திமரப் பட்டையில் ஒரு சிறு துண்டை எடுத்து தண்ணீரில்போட்டு குடித்தால் வயித்துவலி, வயித்துக்குத்து இரத்தபேதி போன்ற நோய்கள் குணமாகின்றன என நம்பி வைத்தியம் செய்து வருகின்றனர்.

கள்ளிக்குளத்தில் நீண்டகாலமாக தனிமையாக வைத்தியம் செய்து வந்தவர் பிரஞ்சுப் பரிகாரியாவார். அவரைத் தொடர்ந்து அவரது மகன் அந்தோனி பரிகாரியார் பெரியமுறிப்பில் குடியேறி நாட்டு வைத்தியம் செய்து வந்துள்ளார். இவரைத் தொடர்ந்து இவரது மகன் சிமியோன் பரிகாரிமீண்டும் கள்ளிக்குளத்தில் குடியேறி 35 ஆண்டுகளுக்கு மேலாக வைத்தியராகச் செயற்பட்டு நாட்டு பிரச்சினை காரணமாக 1986இல் பெரியமுறிப்புக்கு வந்து குடியேறி பரம்பரை வைத்தியத்தைத் தொடர்ந்தார். இப்பரம்பரையில் உதித்தவர்தான் பிரசித்திபெற்ற முறிவுநெறிவு வைத்தியர் சூசைநாயகம் பரிகாரியாவார். சித்த மருத்துவர் சூசைநாயகம் பரிகாரியார் முறிவுநெறிவு, வாதம், மாறாத புரையோடிப்போன புண்கள், சொறி, சிரங்கு, பித்தம், பீனிசம், கபாலம் போன்ற நோய்களைக் கையாண்டு சுகப்படுத்திவரும் வைத்தியராவார். சம்மனசுச் சுவாமி எனப்படும் புனித யோசவ்வாஸ் அடிகளார் நட்ட குருசருகில் சென்று அவ்விடத்தைத் துப்பரவுசெய்து செபித்து வந்தால் தமது வைத்தியம் சித்தியடைவதாக நம்புகின்றார். இவ்வாறு தமது பரம்பரை வைத்தியத்தை புனித யோசவ்வாஸ் அடிகளாரின் பரிந்துரையில் நம்பிக்கைவைத்துத் தொடர்வதாக சூசைநாயகம் பரிகாரியார் தெரிவித்தார்.

## கள்ளிகட்டைக்காடு



இக்கிராமத்திலுள்ள ஆலயம் குருசுக்கோவிலென அழைக்கப்படுகின்றது. இங்கு வைக்கப்பட்டுள்ள குருசு சிகதிற்றல் என்னும் இடத்தில் வைக்கப்படிருக்கும் போ வஸ்ரா மலையில் இருந்த புதுமையான சிலுவையை ஒத்ததாக உள்ளது. தியான யோக சம்பிரதாய மறைபோதகர்கள் (ஒரற்றோறியன்ஸ்) தாம் பணியாற்றிய இடங்களில் சிலுவைகள் வைக்கும்போது போ வஸ்ரா மலையில் இயேசு தோன்றிய சிலுவை வடிவில் வைப்பது வழக்கம். அதாவது சாதாரண சிலுவை போன்றல்லாது மேற்பகுதியில் சிறிய சட்டம் பொருத்தப்பட்டிருக்கும். ஒரேற்ரோறியன் மறைபோதகர்கள் இவ்விடத்தில் பணியாற்றிய காலத்தில் இச்சிலுவை இங்கு வைக்கப்பட்டுள்ளது. யோசவ்வாஸ் அடிகள் மாதோட்டத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் கால் நடையாகச் சென்று பணியாற்றியுள்ளார் என்பதற்கு இணங்க இவ்விடத்திற்கும் வந்து போயுள்ளார் என்றால் அது தவறாகாது. ஒல்லாந்தரின் கலாபனைக் காலத்தில் மாந்தையிலிருந்து எடுத்துவரப்பட்ட மடுமாதா சுரூபம் சிலகாலம் இங்கு மறைத்து வைக்கப்பட்டு வணங்கப்பட்டு வந்தது. அதன் அடையாளமாக பெரிய உயரமான போவஸ்திரா அமைப்புடைய சிலுவை வைக்கப்பட்டுள்ளது என ஊர் மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## வஞ்சியன்குள சிலுவை



கோவாவில் இயேசு காட்சி கொடுத்த சிலுவையை (போ வஸ்ரா) ஒத்ததாக ஒரு பெரிய உயரமான சிலுவையை வஞ்சியன்குள தூய இராயப்பர் சின்னப்பருடைய ஆலயத்தில் காணலாம். இச்சிலுவையை மிகவும் புனிதமாக பாதுகாத்து வருகின்றனர். வெள்ளிக்கிழமைகளில் இறைமக்கள் வந்து சிலுவையைத் தரிசித்து வழிபட்டு வருகின்றனர். அச்சிலுவையடியில் முழந்தாழ்ப்படியிருந்து வேண்டுதல் செய்தால் தமது வேண்டுதல் நிறைவேறிய அனுபவத்தை பலர் என்னிடம் பகிந்துகொண்டனர். வஞ்சியன்குள நாட்டு வைத்தியர் அந்தோனி சீமான் அவர்களும் இச்சிலுவையடியில் வந்து செபிப்பதன் மூலம் தம்மிடம் வந்த நாட்பட்ட நோய்கள் குணமடைந்ததாகக் கருத்துத் தெரிவித்தார். இச்சிலுவையை அம்மக்கள் பறப்பாங்கண்டல் பெரிய கோவிலுக்கு பரிசுத்த வாரத்தில் எடுத்துச் சென்று பாஸ்கா விழா முடிய தமது ஆலயத்திற்கு பயபக்தியாக கொண்டுவருவர். புனித யோசவ்வாசினதும் ஒரேற்ரோறியன் குருக்களினதும் மேலான பணியை எடுத்தியம்புவதாக இச்சிலுவை விளங்குகின்றது. மாதோட்டத்தில் பல பகுதிகளுக்குச் சென்ற புனிதரவர்கள் இப்பகுதிக்கும் வந்திருக்க வேண்டுமென இவ்வூர் பெரியவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

(அடுத்த இதழிலும் தொடரும்)




தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :** கறுப்பு வெள்ளை - 4,500/=, கலர் - 7,500/=



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 61

# கருத்தூன்றிக் கற்கவேண்டும்!

### குருவுக்கு விந்(த்)தை காட்டும் சீடர்!

ஒரு மாணவன், "தாத்தா செத்துப் போயிற்றார்!" எனக் கவலை தோய்ந்த முகத்துடன் வகுப்பாசிரியரிடம் வந்து அனுமதி பெற்றுக்கொண்டு வீடு திரும்பினான். 'தாத்தாவின் பிரிவைக் குறித்து மிகவும் வேதனைப்பட்டவனாக வீடுசெல்கிறானே!' என சிந்தித்த வகுப்பாசிரியர் பாடசாலை நிறைவடைந்ததும் அம்மாணவனின் இறந்துபோன தாத்தாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்திவிட்டுச் செல்லலாம் என எண்ணியவராக அம்மாணவன் வீடு நோக்கிப் புறப்படுகிறார். அம்மாணவனின் வீட்டை நெருங்கிச் செல்லச் செல்ல இறந்த வீட்டுக்கான எவ்வித அடையாளங்களையும் காணாததால் ஆச்சரியம் அடைந்தார். மாணவனின் இல்லத்தை அடைந்த ஆசிரியருக்கு மேற்சொன்ன ஆச்சரியத்தைவிட மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது! தாத்தா இறந்ததாகச் சொல்லி லீவு பெற்றுக்கொண்டவனுடைய தாத்தா அவர்களின் வீட்டு முற்றத்தில் நிற்கக் காண்கிறார் ஆசிரியர்!

ஆசிரியரைக் கண்டதும் தாத்தா அவரை வரவேற்கிறார். இப்போது ஆசிரியரோ எப்படி விடயத்தை வினவுவது என வார்த்தைகள் அற்று நிற்கிறார். எனினும் தன் மாணவனும் அத்தாத்தாவின் பேரனுமாகிய அக்குறித்த மாணவன் எங்கு போனான் என தாத்தாவிடம் விசாரித்தபோது, "காலை வேளையிலேயே பாடசாலையில் இருந்து திரும்பி வந்தவன், 'எங்கட வகுப்பாசிரியர் அக்சிடன்ரில படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் இருக்கிறார். அவரை நினைத்தால் சரியான கவலையாய் கிடக்கு. அவரைப் பார்க்க உடனே போகவேணும். என்ர வகுப்பு மாணவர்கள் எல்லாம் போகுறாங்க. நான் போய்வாறன்' எனப் புறப்பட்டவன்தான்! இன்னும் காணோம்! நீங்க எங்கால சேர் இந்தப் பக்கம்?"என்று கேட்டபோது ஆசிரியர் என்ன கூறுவதென்று தெரியாமல் விழி பிதுங்கி நிற்கிறார்.

### திருத்துமிடத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள்

கடந்த சாதாரணதரப் பரீட்சையின் பின் விடைத்தாள்கள் திருத்தப்பட்டபோது மாணவர்களால் விடைத்தாளில் எழுதப்பட்டிருந்த சில வேண்டுகோள்களையும், விண்ணப்பங்களையும் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று கிடைத்தது. பரீட்சைக்கு ஆயத்தம் செய்து வினாத்தாளின் கேள்விகளுக்கு ஆகக்குறைந்த அடிப்படையான விடைகளை எழுதுகிறார்களோ இல்லையோ, சில மாணவச் செல்வங்கள் A சித்தியினை விடைத்தாள்களைத் திருத்தும் ஆசிரியர்களிடம் இருந்து எதிர்பார்ப்பது குறித்துத் தெரிவிக்கப்பட்டது. கடந்தகால ஒருசில பதிவுகளைப் பார்க்கிறபோது சிலர் பாரம்பரியமாக பயன்படுத்தும் குடும்பக் கஸ்ரம், சுகவீனம், செத்தவீடு போன்ற விடயங்களை; பரீட்சைக்குத் தங்களை ஆயத்தம் செய்யமுடியாது போனமைக்கான காரணங்களாகக் காட்டி புள்ளிகளை பெற்று அதுவும் அனேகமாக A சித்தியைப் பெறவேண்டும் என வேண்டுதல் செய்கிறார்கள்!

### பாரம்பரியமாகச் சொல்லப்படும் காரணங்கள்

"எனக்கு அம்மா, அப்பா இல்லை. நான் மிகவும் கஸ்ரப்பட்டுத்தான் படிக்கிறன். என்னை பாஸ்பண்ணி விடவும். உங்கள கடவுளாக நினைத்து கும்பிட்டுக் கேட்கிறேன்!"

"பிளீஸ்... பிளீஸ்... இந்தப் பாடத்தை மூன்றாவது முறையாக எடுக்கிறேன். எனக்குக் கருணைகாட்டி A போடவும். உங்களை உயிருள்ளவரை மறக்க மாட்டேன்!"

"எனது அம்மம்மா செத்ததால் சோதனைக்குப் படிக்க முடியவில்லை. தயவுசெய்து எனக்கு நல்ல றிசள்ஸ்போட்டு என்னை பாஸ்பண்ணி விடவும்!"

"பிளீஸ் ரீச்சர், எனக்கு இதயத்தில் வருத்தம். என்னால் இருந்து படிக்க முடியாது. மிகவும் கஸ்ரப்பட்டுத்தான் படித்தேன். எனக்கு A போட்டு விடவும். உங்களுக்காக கடவுளை மன்றாடுகிறேன்."

"எனக்கு வீட்டில கஸ்ரம். நம்பாட்டி கதைச்சிப்போட்டு மாக்சைப் போடுங்க. இதுதான் என்னுடைய ரெலிபோன் நம்பர் (குறிப்பிடப்பட்டுள்ளது). C போட்டால்தான் நான் A/L படிக்கலாம்..."

"உங்களுடைய கையை காலாக நினைத்துக் கேட்கிறேன். எனக்கு A போட்டு என்னை பாஸ்பண்ணி விடவும் பிளீஸ்... பிளீஸ்...!" எனத் தங்கள் காரணங்களை விடைத்தாளின் இறுதியில் எழுதிவிடுகிறார்கள். இதனால் எப்பயனும் மாணவர்களுக்கு ஏற்படுவதில்லை என்பதையும், இதனை எழுதுவதால் ஒரு புள்ளியைத்தானும் அவர்கள் பெறப்போவதில்லை என்பதையும் மாணவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இவற்றை எழுதுவதில் நேரத்தை விரையமாக்குவதை விடுத்து, அதுவரையில் விடைகாணாத கேள்விக்கான பதிலைக் கண்டுபிடித்து எழுத முயல்வது ஓரிரு புள்ளிகளையாவது மேலதிகமாகப் பெற உதவலாம்.

### மனதைக் குளிரச்செய்யும் காரணங்கள்!

இன்னும் சில மாணவர்கள் மேற்சொன்ன பாரம்பரியமாக எழுதும் காரணங்களை விட்டுவிட்டு சற்று வித்தியாசமாக எழுதுகிறார்கள். திருத்துகிற ஆசிரியர்களின் மனநிலையை கொஞ்சம் குளிரப்பண்ணி நான்கு, ஐந்து புள்ளிகளையாவது பெற்றுவிடலாம் என யோசித்து எழுதுகிறார்கள் போலும்!

"உங்களை போன்ற மிஸ்மார் எங்கள் பாடசாலையில் இருந்தால் நாங்கள் படிச்சிருப்பம். எங்கட மிஸ் ஒழுங்காப் படிப்பிக்க இல்ல!



அப்ப நாங்க எப்பிடி பரீட்சை எழுதுறது? நீங்க ஒரு நல்ல மிஸ் எண்ட படியால நல்லாத்தான் போடுவீங்க (புள்ளிகளை) எண்டு எனக்குத் தெரியும். பாய் (bye) மிஸ்!"

"என்னுடைய எழுத்து விளங்காது. மிகவும் ஆறுதலாக வாசித்து திருத்தவும் பிளீஸ். மாக்ஸ்சை கிள்ளிப் போடாம அள்ளிப் போடவும் பிளீஸ்."

"என்னை உங்கள் மகளாக நினைந்து மாக்ஸ் போடுங்க மிஸ்."

"நான் A/L படிக்கிறேன். எனக்கு இந்தப் பாடத்தில் C வேண்டும். தயவுசெய்து எனக்கு C போடவும். எனது வாழ்வில் (செபத்தில்) உங்களை நினைத்துக்கொள்வேன்."

### 'தெய்வங்களே எனக்கு உதவுங்கள்'!

இப்போது இப்பரிமாண வளர்ச்சியில் மேலும் சில மாணவர்கள் கொஞ்சம் சுவாரசியமான காரணங்களையும் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் சில:

"உமக்கு, என்னுடைய பேப்பர் திருத்திறது லேசாக இருக்கும். என்னுடைய பெயரால நீர் காசை எடும். அத்தோட எனக்கும் கொஞ்சம் பாத்து மாக்ஸ்சைப் போடும். வெறும் புள்ளிகளைத்தானே கேட்கிறேன்! நீங்களும் கொண்டுபோக மாட்டீங்க! கொண்டுபோய்த் தொலயட்டும் என்று போட்டுவிடுங்க மிஸ்! தைங்கியூ!" என எழுதுகிறவர்களும் இருக்கிறார்கள் என்றால் பாருங்களேன். இதுகூடப் பரவாயில்லை! அடுத்துவரும் இரு காரணத்தைப் பாருங்கள்!

"என்னுடைய அப்பாவும் அம்மாவும் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார்கள். நான் பாஸ் பண்ணவில்லை என்றால் உயிரோடு இருக்க மாட்டேன். எனக்கு A போடவும் பிளீஸ். மறக்க வேண்டாம் பிளீஸ் (இவன் அழுவதுபோல படமும் கீறிக்காட்டி இருக்கிறான்(ள்) விடைத்தாளினைத் திருத்தும் ஆசிரியருக்கு!)."

"என் தெய்வமே! உன்னைத்தான் நம்பியிருக்கிறேன் தெய்வமே! பொறுத்த கட்டத்தில் நீ என்னைக் கைவிட்டு விடாதே!" என விடைத்தாளில் எழுதத் தொடங்கிய இக்குறித்த மாணவன் விடைத்தாளின் இடையிடையே "தெய்வமே எனக்கு நீதான் துணை! உன்னையன்றி வேறு யார் எனக்கு உதவுவார்!" என எழுதிக்கொண்டு வந்து, "தெய்வமே! இந்தப் பேப்பரை செற் பண்ணினவன் என் கையில் அகப்பட்டான் என்றால் அவனை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது! என் தெய்வமே! நீ மட்டும் என்னைக் கைவிட்டுவிடாதே!" எனத் தன் தெய்வீகத் தொடர்பினை விடைத்தாளில் ஆங்காங்கே எழுதி வைத்திருக்கிறான்.

இக்குறித்த மாணவனின் வார்த்தைகளை ஆழமாக நோக்கினால் இவன் இரண்டு தெய்வங்களை மனத்தில் இருத்தி எழுதியிருப்பது புலப்படும். ஒரு தெய்வம், சர்வ வல்லமை பொருந்திய மக்கள் வழிபடும் தெய்வம்! இரண்டாவது, தன்னுடைய விடைத்தாளினைத் திருத்தும் தெய்வம்! எப்படியெப்படி எல்லாம் இவன் போன்றவர்கள் யோசிக்கிறார்கள் என்று சற்று ஆழமாகச் சிந்திப்போமே என்றால் சிந்திக்கிற நமக்குத் 'தலையில் தட்டிவிடும்' போல் இருக்கிறது.

### உண்மையான காரணம் ஒழுங்காகப் படிப்பதில்லையா/ படிப்பிப்பதில்லையா?

இவ்வாறாக ஒழுங்காகச் செய்யாது பரீட்சை எழுதும் மாணவமணிகளை அழைத்து ஒரு விழாவை நடத்தி இவர்களைக் கௌரவித்துப் பாராட்டுப் பத்திரம் வழங்கினால் என்ன என்றொரு எண்ணம் எழுகிறது! இதனை நகைச்சுவையாகச் சொன்னாலும் இவ்விடயம் ஆழ்ந்த கரிசனையை பெறவேண்டிய ஒன்றாக இருப்பது புரியும். மேற்சொல்லப்பட்ட மாணவ மாணவிகள் உண்மையில் பரீட்சைக்குச் சரியாகத் தங்களை ஆயத்தம் செய்யாதவர்களாக இருக்கிறார்கள் என்று அவர்களில் கூற்றுகளில் இருந்து அறியக்கூடியதாக இருப்பதோடு இவர்கள் கூறும் காரணங்களின் உண்மைத்தன்மையிலும் பெரும் சந்தேகங்கள் நிலவுகின்றன. அதேவேளை, இப்பேர்ப்பட்ட மாணவர்களின் மட்டில் ஒருசில ஆசிரியர்களின் கடமையைக் கடந்த கவனிப்பும், அக்கறையும் மிகமிகக் கவலையளிப்பதாகச் சொல்லப்படும் விடயத்தையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டி இருக்கிறது (இதனைப் பிறிதொரு தொடரில் வேண்டுமானால் ஆழமாக நோக்கலாம்).

உண்மையில் சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளின் பின் நடைபெறுகிற வினாத்தாள் திருத்தும் பணிகளின்போது மேற்குறிப்பிட்ட வகையில் பதில்களுக்குப் பதிலாக அல்லது பதில்களோடு மேற்கூறப்பட்ட புதிர்களை அல்லது தங்கள் புலம்பல்களை எழுதும் மாணவர்களின் விபரங்களை பரீட்சைத் திணைக்களத்தால் திரட்டுவது ஒன்றும் பெரிய விடயமல்ல. இப்பேர்ப்பட்ட மாணவர்களின் சுட்டிலக்கங்கள் வினாத்தாள் திருத்தும் ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்டு அவை மாகாணத்தின் ஊடாக கல்வி வலயங்களுக்கு அனுப்பப்பட்டு, அதிபர்கள் ஊடாக மாணவர்கள் இனம் காணப்பட்டு வலய ரீதியாக இம்மாணவர்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு அவர்களின் தற்கால பின்னடைவுக்கான காரணங்களை ஆராயலாம். அதன் பயனாகக் கிடைக்கிற தகவல்களின் அடிப்படையில் இவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புச் செயற்திட்டங்களை வகுக்கலாம் - வழங்கலாம்.

இதன் பயனாகத் தங்களுடைய கற்றலைக் கருத்தூன்றித் தொடரவும், வாழ்க்கையில் புதிய பாதைகளை அமைக்கவும் பின்னடைவில் உள்ள இப்பேர்ப்பட்ட மாணவ மாணவியரின் வாழ்வில் ஒளியேற்றலாம். இதுபோன்ற செயற்பாட்டை நடைமுறைப்படுத்தினால் பரீட்சையில் பின்னடைவைச் சந்திக்கும் மாணவர்களுக்கு பெரிய வரப்பிரசாதமாக மாறலாம்.

### பாராட்டுவதோடு பாதையும் காட்டவேண்டும்

உயர் புள்ளிகளைப் பெறும் மாணவ மாணவியருக்குக் கௌரவம் செய்து, பட்டம் அளித்து, பாராட்டுவிழா நடத்துவது பரீட்சை முடிவுகள் வெளிவந்தவுடனேயே நடந்தேறுகிறது. இச்செயல் உயர்புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை மேலும் சாதிக்கத் தூண்டுவதாக அமையலாம். ஆனால், உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டு விழா நடத்திவிடுவதோடு கல்வித் துறையினர் - கல்வி வலயம், அதிபர், பழைய மாணவர், ஆசிரியர், பெற்றோர் - தம் கடமையில் நிறைவு காணாமல்; கடைநிலையில் உள்ள மாணவ சமூகத்தைக் குறித்தும் அவர்கள் தம் கவனத்திற்கொள்வது கட்டாயமானது. ஏனெனில் உயர் மதிப்பெண்களைப் பெற்றவர்களுக்கு தொடர் கற்றல், வேலைவாய்ப்பு, வாழ்க்கையில் சில நிலைகளை அடைதல் என்பன சாத்தியமாகிற சூழல் உருவாகிறது.

ஆனால், பின்னடைவைச் சந்தித்த மாணவச் செல்வங்களுக்கான வழிகாட்டல்கள் இல்லாமல் அவர்கள் வெறுமைக்குள் தள்ளப்படுகிறார்கள். பின்னடைவுகளைச் சந்தித்திருப்பினும் சரியான வழிகாட்டல்கள் இவர்களுக்குக் கிடைக்கிறபோது இவர்கள் தங்களை மீண்டும் வளர்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்களைப் பெறுகிறார்கள். அதேவேளை இவ்வழிகாட்டல்களைப் பெறத் தவறும்பட்சத்தில் இவர்கள் சமுதாயத்தின் வளர்ச்சியில் இடறல்களாக இருக்கக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. அத்துடன் தங்கள் ஆற்றல்களை - திறன்களை இதுவரையில் இனம் காணாமல் இருப்பதால் அவர்கள் வழிதவறிச் செல்லும் வாய்ப்புக்களும் உண்டு என்பதையும் இலகுவாக மறந்துபோக முடியாது.

### பின்னடைந்தவர்களை முன்னேற்ற...

ஆக, இச்செயற்பாட்டைக் கல்வித் திணைக்களம்தான் செய்யவேண்டும் என எதிர்பார்க்காமல் ஒவ்வொரு அதிபரும் - வகுப்பாசிரியரும் - பெற்றோரும் இவ்வழிநடத்தல் அல்லது வழிப்படுத்தல் முயற்சியில் ஈடுபட முன்வரவேண்டும். வெற்றி பெற்றவர்களைக் கொண்டாடுவதோடு பின்னடைவைச் சந்தித்தவர்களையும் முன்னோக்கிச் செல்ல ஊக்கப்படுத்த முன்வரவேண்டும். இவ்வாறான முயற்சிகளில் கடந்த காலங்களில் ஈடுபட்ட சில ஆசிரியர்கள் - பெற்றோர்களை சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. தம் பிள்ளைகள் தாங்கள்விட்ட தவறுகளை உணர்ந்து, அவற்றைத் திருத்தி, மீண்டும் மீண்டெழுந்து தம் வாழ்வில் உயர்நிலைகளைப் பெற்றிருப்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டி இருப்பதோடு அவற்றை முன்னுதாரணங்களாகக் கொள்ளவேண்டியும் இருக்கிறது.

அன்றாட கடமைகளை மட்டும் நிறைவேற்றுபவர்களாக இருந்துவிடாமல், ஆக்கபூர்வமான, புத்தெழிச்சிமிக்க சிந்தனைகளைப் பகிரும், செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிபர், பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர், கல்வி அதிகாரிகளாக செயற்படுவதன் வழியாக இன்றைய மாணவமணிகளை, கடைநிலையில் நிற்பவர்களை பயன்மிக்கவர்கள் ஆக்கலாம் என்பது உறுதி.




## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். **- மன்னா நிர்வாகம்.**



# தவக்காலச் சிறப்பிதழ்



## சிலுவையில் தொங்கிய இயேசு உரைத்த

# ‘இறுதி ஏழு வார்த்தைகள்’

**முன்னுரை**

கிறிஸ்தவர்கள் நாம் நாற்பது நாட்கள் தவக்காலம் அனுசரிப்பது வழக்கம். திருவழிபாட்டு ஆண்டின் புனித காலமாகிய இத் தவக்காலத்தின் இயேசுவின் துன்னபங்களையும் பாடுகளையும் நினைவுகூரும் இத்தருனத்தில் கிறிஸ்துவின் சிலுவையை மையமாகக் கொண்டு சில சிந்தனைகளை உற்றுநோக்குவோம்.

கடவுளாட்சி பற்றிய நற்செய்தியை இயேசு மக்களுக்கு அறிவித்தார். ஒரு புதிய வாழ்க்கை முறையைத் தழுவுமாறு மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பினை நாம் சிறப்பாக ‘‘மலைப் பொழிவு’’ என்னும் தலைப்பில் மத்தேயு நற்செய்தியிலும் (மத் 5:1-7:29) ‘‘சமவெளிப் பொழிவு’’ என்னும் தலைப்பில் லூக்கா நற்செய்தியிலும் (லூக் 6:17-49) காண்கின்றோம். இயேசு மலை மீது ஏறி அமர்ந்து மக்களுக்குக் கற்பித்தார் என்று மத்தேயுவும், சமவெளியான ஓரிடத்தில் நின்று கொண்டு போதித்தார் என்று லூக்காவும் கூறுகின்றார்.

இயேசுவின் ‘‘மலைப் பொழிவு’’ (சமவெளிப் பொழிவு) ஒரு சிறந்த பகுதி என்பதில் ஐயமில்லை. மலைப் பொழிவில் இயேசு கூறும் கருத்துக்கள் தம் வாழ்வில் ஆழ்ந்த தாக்கத்தைக் கொணர்ந்ததாகக் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, அகிம்சை பற்றி தம் சிந்தனைக்கு வடிவம் கொடுத்ததில் இயேசுவின் மலைப் பொழிவுக்கு முக்கிய இடம் உண்டு என்று அவர் கூறுகிறார்.

மலை மேல் அமர்ந்து இயேசு போதித்ததைப் போலவே சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த நிலையிலும் அவர் போதித்தார் என்பது பலருக்கு அதிசயமாயிருக்கலாம். விவிலிய அறிஞர் கருத்துப்படி, நற்செய்திகளில் ‘சிலுவைப் பொழிவு’ ஒன்றுள்ளது. சிலுவைப் பொழிவு என்றால் என்ன? இதை இயேசு எப்போது, எவ்விதத்தில் வழங்கினார்? இயேசுவைப் பற்றியும் இயேசு நமக்கு வழங்க விரும்பும் செய்தி பற்றியும் சிலுவைப் பொழிவு நமக்கு என்ன அறிவுறுத்துகிறது? இக்கேள்விகளுக்கு விடைதேடும் முயற்சி நீண்ட காலமாகவே நடந்து வருகிறது.

**நான்கு நற்செய்தியாளர்கள்**

சிலுவையிலிருந்து இயேசு கூறிய சொற்களை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு நற்செய்தியாளர்களும் தருகின்றனர். ஆனால் நான்கு பேரும் தருகின்ற சொற்களுக்கிடையே வேறுபாடுகள் உள்ளன. இயேசு கூறியதாக நற்செய்தியாளர்கள் என்ன எழுதி வைத்துள்ளனர் என்பதை முதலில் காண்போம்.

1. மாற்கு ஒரேயொரு சொற்றொடரை இயேசு உரைத்ததாகக் குறிப்பிடுகின்றார். **‘என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்’** (மாற் 15:34)

2. மத்தேயுவும் மாற்குவைப் போலவே ஒரேயொரு சொற்றொடரைத் தருகிறார். **‘என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்’** (மத் 27:46)

3. லூக்கா மூன்று சொற்றொடர்களை இயேசு உரைத்ததாகக் குறிப்பிடுகிறார். **‘தந்தையே, இவர்களை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை’** (லூக் 23:34) **‘நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்’** (லூக் 23:43) **‘தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்’** (லூக் 23:46)

4. யோவான் நற்செய்தியில் இயேசு மூன்று (நான்கு) சொற்றொடர்களைக் கூறியதாகக் காட்டப்படுகிறார்.



**‘அம்மா இவரே உம் மகன்’ ‘இவரே உம் தாய்’** (யோவா 19:26,27) **‘தாகமாய் இருக்கிறது’** (யோவா 19:28) **‘எல்லாம் நிறைவேறிற்று’** (யோவா 19:20)

**சிலுவைப் பொழிவு**

இவ்வாறு நான்கு நற்செய்தியாளரும் இயேசு கூறியவற்றை வெவ்றேு விதமாக எழுதியுள்ளதால் கீழ்வரும் கேள்விகள் எழுகின்றன சிலுவையில் தொங்கிய போது இயேசு உண்மையாகவே என்ன கூறினார்? அவரது வார்த்தைகள் எந்த வரிசையில் அமைந்தன?

இக்கேள்விகளுக்கு விடைதேடும் முயற்சி கி.பி 150களிலேயே தொடங்கியது. டேஷியன் என்பவர் இயேசு சிலுவையிலிருந்து கூறிய சொற்களை நான்கு நற்செய்திகளிலிருந்தும் பொறுக்கி எடுத்து அவற்றிற்கிடையே ஓர் ஒழுங்கை ஏற்படுத்த முனைந்தார். எச்சொற்களை இயேசு முதலில் உரைத்தார் என்னும் கேள்விகளுக்கு விடையளிப்பதில் அன்றிலிருந்து இன்று வரை அறிஞரிடையே ஒத்த கருத்து இல்லை.

இயேசு சிலுவையிலிருந்து கூறிய வார்த்தைகள் ‘இறுதி வார்த்தைகள்’ (The seven Last Words) என்னும் பெயரால் வழங்கப்படுகின்றன. உண்மையில் அவை ஏழு வார்த்தைகள் மட்டுமல்ல மாறாக ஏழு சொற்றொடர்கள், ஏழு வாக்கியங்கள். இச்சொற்றொடர்கள் ஓர் உரையாக அமைந்தன என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவை முழுவதுமாகச் சேர்த்து ஒரு மையக் கருத்தை வழங்குகின்றன. எனவே அவற்றின் தொகுப்பை ஓர் உரை என்று அழைப்பத்தில் தவறில்லை.

சிலுவையிலிருந்து இயேசு கூறிய சொற்களின் தொகுப்பைத் தான் சிலுவைப் பொழிவு (Sermon on the Cross) என்னும் பெயரால் அழைக்கிறோம். இயேசுவே இச்சொற்களைக் கூறினாரா அல்லது இயேசு கூறியதாக நற்செய்தியாளர்கள் கூறுகின்றனரா என்னும் கேள்விக்கு விவிலிய அறிஞர் தரும் பதில் இச்சொற்களை இயேசுவே கூறினார் என்று ஐயமற நிலை நாட்ட இயலாது ஆனால் இயேசு இச்சொற்களைக் கூறியதாக நற்செய்தியாளர்கள் எழுதியுள்ளனர்.

இயேசுவின் வாயிலிருந்து இச்சொற்கள் வந்தனவா என்பதைப் பற்றி ஐயம் இருப்பதால் அவை கடவுளின் வார்த்தை இல்லை என்று நாம் முடிவுகட்டலாமா? இல்லை. ஏனென்றால் இறைநம்பிக்கை கொண்ட நமக்கு இவ்வார்த்தைகள் கடவுளின் வார்த்தைகளே. நமது வாழ்விலும் செயலிலும் இவ்வார்த்தைகள் எதார்த்தமாகிட வேண்டும். அவை நமக்கு விடுக்கும் சவாலுக்கு நாம் பதில் மொழி நல்கிட வேண்டும்.

**பொருள் விளக்கத்தின் நான்கு நிலைகள்**

சிலுவையிலிருந்து இயேசு கூறியதாக நற்செய்தியாளர்கள் தரும் வார்த்தைகளுக்குப் பொருளுரைப்பதில் நான்கு நிலைகளைப் பார்க்கிறோம்.

1. இயேசுவின் சொற்களும் செயல்களும் வெளிப்படுத்துகின்ற நேரடிப் பொருள்.

2. இயேசுவின் சாவுக்குப் பிறகு அவரது சீடர்கள் இயேசுவைப் பற்றி எடுத்துக் கூறியவை இவை படிப்படியாக வாய்மொழி மரபில் ஓர் அமைப்பைப் பெற்றன.

3. கல்வாரி மலையில் நடந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு சுமார் 60 ஆண்டுகளாக இயேசு பற்றிய எழுந்த இறையியல் பார்வைகளும் அவற்றின் வடிவமைப்புகளும். இவையே இன்று நம் கைவசம் உள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு நற்செய்திகள். இவை முதலில் வாய்மொழி மரபாக இருந்து பின்னரே எழுத்து வடிவம் பெற்றன. இவ்வாறு தான் இயேசுவின் துன்பங்கள் பற்றிய பகுதி தொகுக்கப்பட்டது. நற்செய்தி நூல்கள் தாம் இயேசுவின் துன்பங்கள், சாவு பற்றி நமக்கு இருக்கம் ஆதாரங்கள். ஒவ்வொரு நற்செய்தியாளரும் தமது பார்வைக்கும் குறிக்கோளுக்கும் ஏற்ப இறையியல் மற்றும் சமூக நோக்கில் எழுதினார்.

இந்த மூன்றாம் நிலையோடு விவிலிய விளக்கத்தை நிறுத்திக் கொள்ளலாமா? இல்லை நான்காம் நிலையொன்று உள்ளது.

4. இன்றைய வாழ்வுச் சூழமைவோடு விவிலிய வார்த்தைகளை இணைப்பது. இயேசு சிலுவையிலிருந்து உரைத்த வார்த்தைகள் தம் இதயத்தைத் தொட்டு நாம் சுமக்கின்ற பிறர் மேல் சுமத்துகின்ற சிலுவைகள் பற்றிய தெளிவை நமக்கு அளித்திட வேண்டும்.

இயேசுவின் ஏழு வார்த்தைகள் நம்மில் நிறைவேற வேண்டும் என்பதை விட அவை நம்மில் உருவெடுக்க வேண்டும், அவை நம்மை உருமாற்ற வேண்டும் என்று கூறுவதே பொருத்தம்.




## புனித வளனார்



**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

# புனிதர்களின் பாதையில்

‘‘சான்றோர்’’ என்று புனித வளனாருக்குத் திருமறைநூல் மிக உயர்ந்த பட்டம் சூட்டுகிறது. இதன் பொருள்: இறைவன் தனக்கு உகந்தவரைத் தனது புனிதத்தில் சிறந்த முறையில் பங்கேற்கச் செய்கின்றார். மேலும், வளனாரை நீதிமான் என்று அழைப்பதன் மூலம், இறைத்திரு உள்ளத்திற்கு எப்போதும் பணிந்து நடப்பவர் என்றும் பொருள் கொள்ள வேண்டும். இயேசுவின் வளர்ப்புத் தந்தை, கன்னி மரியின் கணவர், திருச்சபை முழுவதுக்கும் பாதுகாவலர். கற்புக்குப் பாதுகாவல், நல்ல படிப்புக்கும் பாதுகாவலர். நல்ல இறப்புக்கும் பாதுகாவல், புனித பெர்னார்து, புனித அவிலா தெரசாள், சியென்னா நகர் புனித பெர்னாடின் ஆகியோர் புனித வளனாரின் பக்தியைப் பரப்புவதில் தலைசிறந்து விளங்கினர்.

‘‘எந்த ஒரு வரமும் எப்பொழுதிலும் நான் புனித வளனாரிடம் மன்றாடிக்கேட்டு, கிடைக்காது போனதென்று என்னால் சொல்ல இயலாது’’ என்றார் புனித அவிலா தெரசாள். இவர் கார்மேல் சபை ஒழுங்குகளைத் திருத்தி அமைத்த பின், சீர்திருத்தமாகத் தொடங்கிய மடங்களில் முதல் மடத்திற்குப் புனித சூசையப்பரைப் பாதுகாவலராகத் தெரிந்துகொண்டார். கனடா நாடு இந்தப் புனிதரின் பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளது. புனித 23ஆம் அருளப்பர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் புனித வளனாரின் பாதுகாப்பில் வைத்திருப்பதாக உலகிற்கு அறிக்கை விடுத்தார். மேலும் 23ஆம் அருளப்பர் அடிக்கடி கூறுவார். ‘‘கீழ்ப்படியக் கற்றுக்கொள்வது, அமைதி காக்கக் கற்றுக்கொள்வது, பேசத் தேவைப் படும்போது, குறைவாகவும் அடக்கமாகவும் பேசுவது. இவற்றைத் தான் புனித வளனார் நமக்குக் கற்றுத் தருகிறார்.’’

தேன் சொட்டும் மறையுரை ஆற்றும் ஆற்றல் வாய்ந்த புனித பெர்னார்து புகழ்ந்துரைப்பதைப் பாருங்கள். அவர் வளனாரைப் பழைய ஏற்பாட்டில் காணும் சூசையுடன் ஒப்பிடுகின்றார். ‘‘தனது வஞ்சக சகோதரர்களால் விற்கப்பட்டு எகிப்து நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்ட சூசை, சீடன் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு புறவினத்தாரிடம் கையளிக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு உவமை. புதிய ஏற்பாட்டில் நாம் காணும் வளனார் ஏரோதின் சீற்றத்திற்குத் தப்பித்து ஓடிக் கிறிஸ்துவுக்கு எகிப்து நாட்டில் அடைக்கலம் தந்தார். முன்னைய சூசை அரசனுக்கு உகந்தவராய் நடந்தார். அந்த மன்னனுடைய மனைவியின் பசப்பு மொழிகளால் மதி இழக்கவில்லை. வளனாரோ தம் துணைவியை இறைவனின் தாய் என உரிய மதிப்புடன் நடத்தினார். அவரது கன்னிமையை உணர்ந்தார். அவரது கன்னிமைக்குப் பழுதேற்படாமல் பாதுகாத்தார். முன்னைய சூசை கனவுகளைத் தெளிவுபடுத்தும் திறமை பெற்றிருந்தார். வளனாரின் கனவில் தேவதூதர் தோன்றிக் குழந்தையைக் காத்துக்கொள்ளும் முறையை அறிவித்தார். முன்னைய சூசை உணவுப் பொருட்களைத் தனக்கெனத் திரட்டவில்லை. வளனாரோ ‘‘நானே வானின்று இறங்கி வந்த வாழ்வின் உணவு’’ என்று கூறியவானின்று இறங்கிய, எம் பெருமான் இயேசுவைத் தமது அடைக்கலத்தில் வைத்துப் பார்த்து மகிழ்ந்தார்.’’

**சிந்தனைக்கும் செயலுக்கும்**

நம் சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும், மகளிரின் கற்பு மாண்புடன் திகழ உறுதுணையாவோம்.

# கலை இலக்கியச் சாளரம்

### - சிந்தனைக் கட்டுரை -

# ஐயோ......! காயமா.....!

சி. அஜந்தன், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, இறையியல் 4ம் வருடம், யாழ்ப்பாணம்.



கிளித்தட்டு விளையாடி விழுந்து காலில் பட்ட காயத்தில் இரத்தம் சொட்ட அழுதுகொண்டு அம்மாவிடம் போனபோது, என் தலையைத் தடவியபடி, "அழாதடா செல்வம், இது வளரமுதல் மாறிடும்" என்று அம்மா சொன்னதுதான் எவ்வளவு உண்மை. உடும்பு பிரட்டி தவளத் தொடங்கியபோது, மைனாக் குஞ்சுபோல தத்தி தத்தி நடக்கத் தொடங்கிய நாட்களில், சைக்கிள் ஓடப் பழகிய பொழுதுகளில் எத்தனை காயங்கள்.

இன்றுவரை பல காயங்களை உடலிலும் மனசிலும் சுமந்துகொண்டுதானே நடந்துகொண்டிருக்கிறோம். வளர முதல் காயம் மாறிவிடும் என்று அம்மா சொன்ன வரிகளை, நாம் வளர மாறி மாறி காயங்கள் வேண்டும் என்று மாற்றிச்சொல்ல தோன்றுகிறது.

ஏனெனில் காயங்கள் அழகாக்கிய கற்களைத்தானே சிலைகள் என்கிறோம். ஆயிரம் ஆயிரம் வேர்கள் பிளந்துபோட்ட பூமியைத்தானே மூங்கில் காடென்று இரசிக்கிறோம். வானத்திலிருந்து விழுந்து காயப்பட்ட துளிகளைத்தானே நதிப்படுக்கை என்று நேசிக்கின்றோம். பேனா முனைகள் காயப்படுத்திய பக்கங்களைத்தானே கவிதைகள் என்று படிக்கின்றோம். வண்டுகளால் காயப்பட்ட பூக்கள் தந்ததுதானே நாம் சுவைக்கும் தேன்கூட. ஆகவே காயங்கள் அழகு செய்கின்றன.

எம்மால் ஏன் காயங்களை நேசிக்க முடிவதில்லை? ஏனெனில் காயங்கள் வரும்போது வலிகள் என்ற நண்பர்களையும் அழைத்துக்கொண்டே வருகின்றன. இதனால்தான் நாம் காயங்களுக்கு வாசற்கோலம் போட்டு வரவேற்காமல், கதவடைப்புச் செய்கின்றோம். வெற்றிகள் வேண்டும்; வியர்வைகள் வேண்டாம் என்கின்றோம். மாலைகள் வேண்டும் பூப்பறிக்கக் கூடாதென்றோம். சிலுவைகள் இல்லாமல் இயேசுக்களாக நினைக்கின்றோம்.

எப்படி சாத்தியமாகும்? துளைகள் இல்லாமல் புல்லாங்குழலா? வலிகள், காயங்கள் ஒரு நெருப்பு. வாழ்க்கை ஒரு பொன். புடமிடுங்கள்! பிரகாசமாய் ஒளிர்வீர்கள். ஒரு கரிய இரவைக் கடக்கச் சம்மதிப்பதால்தானே இன்னொரு சூரிய உதயம் நமக்குக் கிடைக்கின்றது.

ஓடங்கள் கரையில் கட்டப்படுவது பாதுகாப்பானதுதான், ஆனால் ஓடங்கள் செய்யப்படுவதன் நோக்கம் அதுவல்லவே. கண்ணீர்களால் நீங்கள் அழுக்காகி விடுவதில்லையே. கண்ணீர்கள்கூட வாழ்க்கைப் பூந்தோட்டத்திற்கு பன்னீர்கள் ஆகின்றன. இரத்தக் கோடுகளால் செய்த சிவத்தச் சித்திரம் சிலுவை. இதுதான் உலக வரலாற்றின் மிகப்பெரும் வெற்றி. பயணம் நிறைவுற்ற முகவரி. இரத்தக் கோடுகள் வழியே நடக்கத் துணிந்தால் சிவத்தக் கம்பளங்கள் மீதேறி நடக்கும் காலங்கள் தூரமில்லை.

இதோ, காயப்படத் தயாராகுங்கள். காயங்களை யாசியுங்கள், சிலைகளாக வேண்டுமா? உழிகளை நேசியுங்கள். வலிகளை எப்போதும் வாசியுங்கள். வாழ்க்கை முற்றத்தை காயக்கோலங்களால் அலங்கரியுங்கள். வாழ்க்கைக்கு வெளியே பயந்து ஓடுவதால் வெறுமையாகி விடுகிறீர்கள்! காயங்களோடு நடக்கக் கற்றுக்கொள்ளுங்கள். மறுமுறை உங்களை சிகரத்தின் சந்திக்கிறேன்.

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# மருத்துவக் குணங்கள் நிறைந்த வெந்தயம்



- வெந்தயத்தை வறுத்து பொடி செய்து 1 டம்ளர் நீரில் ஊறவைத்து உட்கொள்ள வயிற்று வலி, வயிற்றுப்பொருமல், சுரம், உட்சூடு, வெள்ளை சீதக்கழிச்சல் முதலியவைகள் போகும்.
- வெந்தயம் 17 கிராம் எடுத்து 340 கிராம் பச்சரிசியுடன் சேர்த்து சமைத்து உட்பிட்டுச் சாப்பிட குருதி பெருகும்.
- வெந்தயத்தை ஒரு கைப்பிடியளவு எடுத்து ஊறவைத்து தலை முழுகிவர முடிவளரும். அது முடி உதிர்ந்து போவதைத் தடுக்கும்.
- வெந்தயத்தை உலர்த்தி பொடி செய்து மாவாக்கிக் களி கிண்டிக் கட்ட புண், பூச்சி நோய்களைப் போக்கும்.
- வெந்தயத்தை வறுத்து இத்துடன் வறுத்த கோதுமையைச் சேர்த்து காப்பிக்குப் பதிலாக வழங்கலாம். இதனால் உடல் வெப்பம் நீங்கும்.
- வெந்தய லேகியம்: வெந்தயம், மிளகு, திப்பிலி, பெருங்காயம் இவற்றை சமஅளவு எடுத்து உலர்த்தி நன்றாக வறுத்துப் பொடி செய்து சர்க்கரைப் பாகில் போட்டு இலேகியமாகச் செய்து சாப்பிட சீதக்கழிச்சல், வெள்ளை, மேல் எரிச்சல், குருதியழல், தலைக்கனம், எலும்பைப் பற்றிய சுரம் தீரும்.
- நீர் வேட்கை இளைப்பு நோய், கொடிய இருமல் இவைகளை விலக்கும். ஆண்மை தரும்.
- வெந்தயம், கடுகு, பெருங்காயம், கறிமஞ்சள் இவைகளை சமபாகம் எடுத்து நெய் விட்டு வறுத்துப் பொடி செய்து சோற்றுடன் கலந்துண்ண வயிற்றுவலி, பொருமல், வலப்பாடு இடப்பாட்டீரல் வீக்கங்கள் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வரும்.
- மிளகாய், கடுகு, வெந்தயம், துவரம்பருப்பு, பெருங்காயம், கருவேப்பிலை இவைகளைத் தக்க அளவு எடுத்து நெய்விட்டு வறுத்து புளிக்குழம்பை இதில் கொட்டி உப்பு சேர்த்து சட்டியிலிட்டு அரைப்பாகம் சுண்டியபின் இறக்கி சூட்டுடன் சாப்பிட வெப்பத்தால் நேரிடும் சிற்சில பிணிகள் தணியும்.
- இத்துடன் வாதுமை பருப்பு, கசகசா, கோதுமை நெய், பால், சர்க்கரை சேர்த்து கிண்டி உட்கொள்ள உடல் வலுக்கும், வன்மையுண்டாகும். இடுப்பு வலி தீரும்.
- வெந்தயத்தை, சீமை அத்திப்பழம் சேர்த்தரைத்து கட்டிகளின்மீது பற்றுப்போட அவைகள் உடையும். படைகள்மீது பூச அவைகள் மாறும்.

# கொஞ்சம் சிரிங்க

**வாத்தியார்** : இங்குள்ள முட்டாள்கள் எல்லாம் எழுந்து நில்லுங்கள்... சிறிது நேரம் யாரும் எழுந்திருக்கவில்லை. பிறகு ஒரே ஒரு மாணவன் எழுந்து நின்றான்.

**வாத்தியார்:** அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக்கொண்டே "நீ முட்டாள் என்று உனக்கு எப்படி தெரியும்?"

**மாணவன்:** அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் தனியாக நிக்கறதை பார்க்க பாவமா இருந்தது. அதனால்தான் நானும் எழுந்து நின்றேன்...

..................................

**வாத்தியார்:** கம்பராமாயணத்தை எழுதியது யார்? குளு (Clue) கேள்வியிலேயே பதில் இருக்கு!

**பையன்** : இராமர் சார்!

**வாத்தியார்** : கிழிஞ்சது கிருஷ்ணகிரி !

**பையன்** : அப்போ கிஷ்ணர் சார்!

**வாத்தியார்** : அட ராமா!

**பையன்** : அப்ப... கண்டிப்பா ராமர்தான் சார்!

**வாத்தியார்** : ?????

..................................

**கணவன்** : சாமிகிட்ட என்னமா வேண்டிக்கிட்ட?

**மனைவி** : அடுத்த ஜென்மத்திலும் நீங்கதான் என் புருசனா வரணும்னு வேண்டிகிட்டேங்க.

**கணவன்** : எனக்கு அடுத்த ஜென்மமே வேணாம்னு வேண்டிகிட்டேன்.

**மனைவி:** வந்திட்டீங்களா! உங்களைத்தான் தேடிக்கிட்டு இருந்தேன்!

**கணவன்:** ஏன்? என்னாச்சு?

**மனைவி:** இன்றைக்கு ஒருத்தன் எங்கள் அப்பாவைப்பற்றி தவறா பேசிட்டான். நானும் அவன் அப்பனை நல்லா திட்டிட்டேன்!

**கணவன்:** சரி..!

**மனைவி:** இருந்தாலும் ஆத்திரம் அடங்கவில்லை! அவன் அப்பனோட மண்டைய உடைச்சாத்தான் நிம்மதி!

**கணவன்:** (கலவரப் பீதியில்...)நமக்கு எதுக்கு இந்த வம்பு? மன்னிச்சுவிட்டு வேண்டியதுதானே!

**மனைவி:** மன்னிக்கிறதா? அந்தப்பேச்சுக்கே இடமில்லை, எங்க அந்த உருட்டுக்கட்டை.....

(என்று தேடிக்கொண்டே செல்ல...) (வாசலிலிருந்து வந்த மகன்...)

**மகன்:** அப்பா...சீக்கிரம் ஓடிடுப்பா!

**அப்பா:** ஏண்டா..?

**மகன்:** நான்தான் கோபத்தில தாத்தாவை திட்டிவிட்டேன்.

**அப்பா:** அடப்பாவி மகனே! வீட்டுக்குள்ள வந்தால் உயிர கையில பிடிச்சுக்கொண்டு அலையவேண்டியதா இருக்கே., அய்யய்யோ... இப்ப நான் என்ன செய்வேன்..! எங்க போவேன்..! செய்யாத குற்றத்துக்கு நாயா, பேயா அலைய வைக்கிறாங்களே... இதைக் கேட்க நாதியில்லையா...

# சமையல் குறிப்பு

## காரா பூந்தி



### தேவையானவை:

கடலை மாவு - 2 கப்
அரிசி மாவு - 4 ஸ்பூன்
சோடா உப்பு - கால் ஸ்பூன்
மஞ்சள் தூள் - 1 சிட்டிகை
மிளகாய் தூள் - 2 ஸ்பூன்
எண்ணெய் - தேவையான அளவு
கடலை பருப்பு - 4 ஸ்பூண்
கருவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு



### செய்முறை :

முதலில் ஒரு பெரிய பாத்திரத்தில் கடலை மாவு, அரிசி மாவு, சோடா, மஞ்சள் தூள், மிளகாய் தூள் மற்றும் உப்பு சேர்த்து தண்ணீர் ஊற்றி, நன்கு அடர்த்தியாக பேஸ்ட் போல் கலந்துகொள்ளவும். அவ்வாறு கலக்கும்போது மாவு மிகவும் சொப்பாகவும் திக்காகவும் இருக்க வேண்டும்.

பின்பு கடாயை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான எண்ணெய்விட்டு காய்ந்ததும், பூந்திக் கரண்டியை எடுத்துக்கொண்டு, அந்தக் கரண்டியை எண்ணெயின் மேற்புறத்தில் வைத்து பிடித்துக்கொண்டு, அந்த கரண்டியில் கடலை மாவுக் கலவையை ஊற்றவேண்டும். அவ்வாறு ஊற்றும்போது அதிலிருந்து மாவானது, துளைகள் வழியாக எண்ணெயில் விழும், அதனை பொன்னிறமாக பொரித்து ஒரு பாத்திரத்தில் போட்டுக்கொள்ளவும். இதேபோன்று அனைத்து மாவையும் ஊற்றி, பூந்திகளாக செய்துகொள்ளவும். பின் மற்றொரு கடாயை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி, வேர்க்கடலை, கறிவேப்பிலை போன்றவற்றை பொரித்து, பூந்தியுடன் சேர்த்து கிளற வேண்டும். இப்போது சுவையான காரா பூந்தி ரெடி.

# மன்னா விளம்பரப் பலகை

கோழையும் முட்டாளுமே 'இது என் விதி' என்பான்.
ஆற்றல் மிக்கவனோ, 'என் விதியை நானே வகுப்பேன்' என்று கூறுவான்.

அழகைப்பற்றி கனவு காணாதீர்கள், அது உங்கள் கடமையை பாழாக்கிவிடும். கடமையைப்பற்றி கனவு காணுங்கள். அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.

......................

எந்தப் பிழையை நீ எங்கே கண்டாலும் அது உன்னிடம் இருந்தால் திருத்திக்கொள்.

......................

உன் அன்பிற்காக ஏங்குபவர்களை ஒருபோதும் புறக்கணிக்காதே. ஏனெனில் நீயும் ஒருநாள் யாரோ ஒருவரின் அன்பிற்காக ஏங்கும் நாள் வரலாம்.

வீணாக ஆயிரம் வார்த்தைகள் கூறுவதைவிட, மனதிற்கு இதம் தரும் ஒரு சொல் உயர்வானது!

பொய் சீக்கிரம் வெல்லும்; ஆனால் நிலையற்றது. நேர்மை தாமதமாக வெல்லும்; ஆனால் நிலையானது.

......................

எதுவரை சென்றேன் என்பது முக்கியமில்லை, எதை நோக்கி எதற்காகச் சென்றேன் என்பதே எனக்கு முக்கியம்.

......................

பேசவேண்டிய நேரத்தில் அமைதியாக இருந்துவிட்டால், அமைதியான நேரத்தில் நிம்மதியாக இருக்கமுடியாது.

அஞ்சக்கூடாத விடயங்களுக்கு அஞ்சுபவர்களும், அஞ்சவேண்டியவற்றுக்கு அஞ்சாதவர்களும் தீய பாதையில் செல்கிறவர்களாகிறார்கள்.

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

### தொடர் 15 -

**290. திருமுழுக்கு அருளடையாளத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ற நாள் - நேரம் எது? ஏன்?**

ஞாயிற்றுக்கிழமையில் - அதுவும் ஞாயிறு திருப்பலியில். ஏனெனில் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள்; இது பாஸ்கா மறைநிகழ்வை வெளிப்படுத்துகின்ற நாள்; பாவத்திலிருந்து மனிதன் வாழ்வுக்குக் கொண்டுவரப்பட்டதை நினைவுப்படுத்தும் நாள்; பிறப்புவழி பாவத்திலிருந்து நம்மைக் கடவுளின் மக்கள் என்ற நிலைக்குக் கொண்டுவரும் அருளடையாளமாக திருமுழுக்கு இருப்பதால் ஞாயிற்றுக்கிழமைத் திருப்பலியில் இவ்வருளடையாளம் கொண்டாடப்படுவது ஏற்றதாகும். இது மட்டுமல்ல, திருமுழுக்கிற்கும் நற்கருணைக்கும் தொடர்பு உண்டு. ஞாயிற்றுக்கிழமை நற்கருணையின் நாளும்கூட. தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக் கிழமையில்தானே நற்கருணையைக் கொண்டாடினார்கள். எனவே இது திருச்சபையின் நாளாகையால் அனைவரும் ஒரே திருமுழுக்கிலும் ஒரே நற்கருணையிலும் பங்குகொள்கிறோம் என்பதை முன்னிட்டும் கூடியிருக்கின்ற திருச்சபையின் உறுப்பினராக நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் என்பதை முன்னிட்டும் இந்நாளே ஏற்ற நாளாகும்.

அதுமட்டுமல்ல, திருமுழுக்குக் கொண்டாட்டம் ஒரு பங்கின் சிறப்பான ஒரு திருநிகழ்வு. பங்கு உறுப்பினர் ஒவ்வொருவரும் குழந்தையின் நம்பிக்கை (விசுவாச) வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துவதன் அவசியத்தைத் திருமுழுக்கு எடுத்தியம்புகிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் திருமுழுக்குக் கொண்டாட்டம் பங்குச் சமுதாயம் முழுவதன் ஓர் அனுபவம். இது தனி மனிதர் செயல் அல்ல. எனவே பங்குச் சமுதாயத்தின் மத்தியில் இது கொண்டாடப்பட வேண்டும்.

அடுத்ததாக, திருமுழுக்கு நம்மை நற்கருணை என்ற நம்பிக்கையின் அருளடையாளத்திற்கு இட்டுச்செல்கின்றது. இது திருமுழுக்கிற்கும், நற்கருணைக்கும் உள்ள தொடர்பை விரித்துரைக்கின்றது. எனவே இந்த அருளடையாளத்தைத் திருப்பலியில் கொண்டாடுவது சிறந்தது.

**குறிப்பு:-** ஞாயிற்றுக்கிழமைகளில் திருமுழுக்கு கொண்டாடப்பட்டாலோ, தனிக்கொண்டாட்டமாக நடைபெற்றாலோ ஒவ்வொரு கொண்டாட்டத்தின் (திருமுழுக்கு, ஞாயிறு) சிறப்பு இயல்புகள் விடுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

**291. திருமுழுக்கு எத்தனை வகைப்படும்? விளக்குக.**

**மூன்று வகைப்படும்**

அ) தண்ணீரில் திருமுழுக்கு
ஆ) இரத்தத் திருமுழுக்கு
இ) விருப்பத் திருமுழுக்கு

**அ) தண்ணீர் திருமுழுக்கு: கீழே காண்க எண். 288**

**ஆ) இரத்தத் திருமுழுக்கு:** திருமுழுக்குப் பெறாத ஒருவர் கிறிஸ்தவ நம்பிக்கைக்காக மறைச்சாட்சியாக மரித்தல் ஆகும். இது கடவுள்மேல் அவர் கொண்டுள்ள அன்பைக் காட்டுகிறது. எனவே அவரது பாவங்கள் மன்னிக்கப்பட்டு நேரடியாக விண்ணகம் சென்றடைகிறார் என பொதுவாக எண்ணப்படுகிறது.

**இ) விருப்பத் திருமுழுக்கு:** இயேசுக் கிறிஸ்துவை தமது மீட்பராக ஏற்றுக்கொண்டாலும் திருமுழுக்குப்பெற சூழ்நிலை அமையாதபோது ஒருவர் திருமுழுக்குப் பெறுவதற்கு விரும்பினால் அது விருப்பத் திருமுழுக்கு ஆகும். இதைப்பற்றி 2ஆம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு கூறுகிறது.

"தங்கள் குற்றம் எதுவும் இன்றி கிறிஸ்துவின் நற்செய்தியையும், அவரது திருச்சபையையும் அறியாதவர்கள் நேர்மையான உள்ளத்துடன் கடவுளைத் தேடி, மனச்சான்றின் குரலில் கடவுளின் திருவுளத்தை அறிந்து ஏற்று, அருளின் தூண்டுதலால் அதை வாழ்வில் கடைப்பிடிக்க முயன்றால் நிலைவாழ்வைப் பெறுவர். மேலும் தங்களது குற்றத்தினால் அன்றி வெளிப்படையாகக் கடவுளை இன்னும் ஏற்றுக்கொள்ளாதவர்களுள், நேரிய நெறியிலே கடவுளின் அருள் துணையோடு நடக்க முயல்பவர்களுக்கும் அனைத்தையும் காக்கும் கடவுள் மீட்பிற்குத் தேவையான உதவிகளைத் தர மறுப்பதில்லை.."
(திருச்சபை 16)

**292. திருமுழுக்கு எத்தனை விதங்களில் வழங்கப்படலாம்? அவை யாவை?**

**மூன்று:**

1. மூழ்குதல் - Immersion
2. ஊற்றுதல் - Effusion
3. தெளித்தல் - Aspersion

**293. திருமுழுக்கில் ஏன் வாக்குறுதி கொடுக்கப்படுகிறது?**

பாவ வாழ்வை விட்டுவிட்டு இயேசுவைத் தம் மீட்பராக பற்றிக்கொள்வதன் அடையாளமாகத் திருமுழுக்கு வாக்குறுதி கொடுக்கப்படுகிறது.

**294. மறைபொருள் மறைக்கல்வி (Mystagogical Catechesis) என்றால் என்ன?**



இதன் பொருள் இயேசுக் கிறிஸ்துவின் 'தூய மறை நிகழ்வுகளை / மறைபொருள்களைப் (Sacred mysteries) பற்றியும் மறைக்கோட்பாடுகள் பற்றியும் உள்ள படிப்பினைக் கொண்டது ஆகும். இம்மறைக்கல்வி புகுமுக அருளடையாளங்களைப் பெற்ற புதிய கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

### 3.2.2 உறுதிப்பூசுதல்

**295. உறுதிப்பூசுதல் என்பது என்ன?**

நம்மைக் கிறிஸ்தவ வாழ்வில் திடப்படுத்துவதற்காக தூய ஆவியாரையும் அவருடைய வரங்களையும் நமக்குக் கொடுக்கிற ஓர் அருளடையாளம்.

**296. உறுதிப்பூசுதலின் சடங்குகள் எவை?**

**1. தொடக்கச் சடங்கில்:**
- உறுதிப்பூசுதல் பெறுபவர் பவனியாக கோவிலுக்குள் வருதல்,

**2. இறைவார்த்தை வழிபாட்டில்:**
- தூய ஆவியாரைப் பற்றிய பகுதிகளை வாசித்தல்,

**3. உறுதிப்பூசுதல் சடங்கின்போது:**
- உறுதிப்பூசுதல் பெறுபவர் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல்.
- ஆயர் தம் கரங்களை உறுதிப்பூசுதல் பெறுவோரை நோக்கி விரித்து தூய ஆவியாரின் வருகைக்காக வேண்டுதல். வேண்டுதலில் இறைமக்களும் ஆயருடன் இணைதல்.
- உறுதிப்பூசுதல் பெறுபவரின் நெற்றியில் ஆயர் 'கிறிஸ்மா' தைலம் பூசுதல். அந்நேரத்தில் ஞானப்பெற்றோர் அவருடைய வலது தோள்மேல் கை வைத்தல்.

**4. முடிவுச் சடங்கில்:**
- ஆயர் சிறப்பு ஆசி வழங்குதல்

**297. உறுதிப்பூசுதலின்போது நடைபெறும் சடங்குகளின் பொருள் என்ன?**

**1. கரம் விரித்து வேண்டுதல்:** திருத்தூதர் கரங்களை விரித்து மன்றாடியதுபோல ஆயரும் செய்கிறார். தூய ஆவியார் தம் கொடைகளுடன் உறுதிப்பூசுதல் பெறுபவரின் உள்ளத்தில் இறங்கி வரும்படி ஆயர் மன்றாடுகிறார்.

**2. சிலுவை அடையாளம் வரைதல்:** நெற்றியில் சிலுவை அடையாளம் பெற்றுக்கொண்டவர் இயேசுவின் போர் வீரர் என்றும் ஆண்டவரின் வார்த்தையின் பொருட்டு ஒருபோதும் வெட்கப்படக்கூடாது என்றும் குறிக்கிறது.

**3. கிறிஸ்மா தைலம் பூசுதல்:** இப்பூசுதலின் வழியாக உறுதிப்பூசுதல் வழங்கப்படுகிறது. கிறிஸ்துவின் கடமைகளைச் சரியாகச் செய்வதற்கு வேண்டிய வரங்களை உறுதிப்பூசுதல் எனும் அருளடையாளத்தின் வழியாய் அவர் பெறுகிறார் என்பதைக் குறிக்கிறது.

**4. சமாதான முத்தம் வழங்குதல்:** உறுதிப்பூசுதல் பெற்றவர் இவ்வுலக நலன்களின்மேல் பற்றுக்கொள்ளாமல் வாழ்ந்து, தீமையை வெறுத்து நன்மையைச் செய்தால் அவருடைய உள்ளத்தில் இறை ஆசியும் மன அமைதியும் உண்டாகும் என்பதைக் குறித்துக்காட்ட.

**298. ஆயர் உறுதிப்பூசுதல் வழங்குகின்றபோது திருத்தலத்தைப் பூச மற்றக் கூட்டுப்பலியாளர்களை தன்னுடன் பணியாற்ற இணைத்துக் கொள்ளலாமா?**

இணைத்துக் கொள்ளலாம். தூய ஆவியாரின் வருகைக்கான மன்றாட்டை ஆயர் சொல்வார். அதன்பின் ஆயர் கிறிஸ்மா தைலத்தைப் பூசி உறுதிப்பூசுதலை வழங்கும்போது பிற கூட்டுப்பலியாளர்களும் அதே செயலை உறுதிப்பூசுதலைப் பெறுகின்றவர்களுக்குச் செய்யலாம். ஆனால் அந்தக் கொண்டாட்டத்தின் பணியாளர் ஆயர்தான். அவருடைய பெயர் மட்டுமே பதிவேட்டில் இடம்பெற வேண்டும் (உறுதிப்பூசுதல் சடங்குமுறை, முன்னுரை, எண்கள் 7,8).

### 3.2.3 நற்கருணை

**நற்கருணை தொடர்புடைய குறிப்புகளை மேலேயும் (கேள்வி எண்கள்..) காணலாம்.**

**299. நற்கருணை என்பது என்ன?**

அப்ப, இரச வடிவங்களில் இயேசுவின் திரு உடல், திரு இரத்தம் அடங்கி இருப்பதும், அதில் இயேசு மெய்யாகவே முழு மனிதராகவும் இறைவனாகவும் உடனிருப்பதையும் குறித்துக்காட்டும் ஓர் அருளடையாளம்.

**300. நற்கருணையை யார் வழங்கலாம்? அவர்களைப்பற்றி விளக்கவும்.**

நற்கருணை வழங்க இருவகைப் பணியாளர்கள் உண்டு: சாதாரணப் பணியாளர்கள்; அசாதாரணப் பணியாளர்கள்.

- சாதாரணப் பணிபணியாளர்கள்: ஆயர், அருள்பணியாளர், திருத்தொண்டர்.
- அசாதாரணப் பணியாளர்கள்: (தல) திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட/ நியமனம் செய்யப்பட்ட பொதுநிலையினர்.

**301. அசாதாரணப் பணியாளர்களை நியமனம் செய்வது யார்? அவர்களின் சிறப்புத் தகுதிகள் யாவை?**

❖ அசாதாரணப் பணியாளர்களை நியமனம் செய்வது ஆயரே.
❖ **இப்பணியாளர்களின் தகுதிகள்:**

- திருப்பலியின் அனைத்துப் பகுதிகளையும் அறிந்திருக்க வேண்டும். குறிப்பாக, திருவிருந்துச் சடங்கு.
- திருவிருந்தைப் பகிர்ந்தளிக்கும்போது கவனத்துடனும் தகுந்த மரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.
- நோயாளிகளுக்கு நற்கருணை வழங்கும்போது தகுந்த தயாரிப்பு வேண்டும்: இறைவார்த்தையைப் பகிர்ந்தளிக்கவும் இறைவேண்டல் வழிபாடு நடத்தவும் தெரிய வேண்டும்.
- நற்கருணையின் மேலுள்ள தங்களின் பக்தி, நம்பிக்கை, மரியாதை இவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும். பிறருக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ வேண்டும்.
- எல்லாவற்றிற்கும் மேலாக, இது ஒரு பதவி அல்ல, பணி என்பதையும் அதேவேளையில் இது ஒரு தன்னார்வப் பணி அல்ல, ஓர் அழைத்தல் என்பதையும் உணரவேண்டும்.

**302. அசாதாரணப் பணியாளர்களின் நற்கருணை வழங்கும் பணி எவ்வாறு அமைகிறது?**

நான்கு அம்சங்கள் சிறப்புடன் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

அ) ஆயரால் நியமிக்கப்பட்டவர்களைத் தவிர பங்கு அருள்பணியாளர் தேவையின் பொருட்டு, அந்நேரத்திற்கு மட்டும் ஒருவரை நற்கருணை வழங்குமாறு பணித்தால், கீழே காணப்படும் சிறிய சடங்கை 'உலகின் பாவங்களைப் போக்கும்...' எனும் மன்றாட்டிற்குப்பின் நிறைவேற்ற வேண்டும்.

**அருள்பணியாளர்:** "நீர் இப்பொழுது உம் சகோதர சகோதரிகளுக்கு கிறிஸ்துவின் திருஉடலை வழங்குமாறு, ஆண்டவர் உம்மை + ஆசீர்வதிப்பாராக.
அசாதாரணப் பணியாளர்: "ஆமென்".

அ) அசாதாரணப் பணியாளர் நற்கருணைக் கலத்திலிருந்து தாமாகவே நற்கருணையை எடுத்து உட்கொள்ளாமல், அருள்பணியாளரிடமிருந்து பெற்று உட்கொள்ள வேண்டும்.

இ) அதேபோன்று நற்கருணைக் கலத்தைத் தாமாகவே பீடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமல் அருள்பணியாளரிடமிருந்து அதைப் பெற்றுச்செல்ல வேண்டும்.

ஈ) நற்கருணைக் கிண்ணத்தைப் பீடத்திலேயே விட்டுச்செல்ல வேண்டுமேயொழிய, திருக்கிண்ணத்தைத் தூய்மைப்படுத்தும் பணியைச் செய்யக்கூடாது.

**குறிப்பு:** இதற்கு சில விதிவிலக்குகள் உண்டு. (காண்க. GIRM எண் 148).

**303. சாகும் நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கு அருள்பணியாளர் இறுதிப் பயண உணவாக (Viaticum) நற்கருணை வழங்கும்போது அனுசரிக்கும் சடங்குகள் எவை?**

அ) நோயாளியின் அறையில் வெள்ளைத் துணியால் மூடப்பட்ட ஒரு சின்ன மேசை, அதன்மேல் இரண்டு எரியும் திரிகளுக்கு மத்தியில் ஒரு பாடுபட்ட திரு உருவம், தீர்த்தம், ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஆகியவை ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். மேசையின்மேல் அருள்பணியாளர் நற்கருணையை வைத்தல், இவ்வீட்டிற்கு 'அமைதி உண்டாகுக' என்று இச்சடங்கை ஆரம்பித்து, அங்கிருப்போர் அனைவர் மேலும் தீர்த்தம் தெளித்தல்.

ஆ) நோயாளி விரும்பினால் ஒப்புரவு அருளடையாளம் வழங்குதல்.

இ) எல்லாம் வல்ல இறைவனிடமும் எனும் மன்றாட்டு.

ஈ) ஆண்டவர் கற்றுத்தந்த இறைவேண்டல்.

உ) நோயாளிக்குத் திருவிருந்து வழங்குதல்

ஊ) சிறு மன்றாட்டு

எ) இறுதி ஆசி வழங்குதல்.

**நற்கருணை**

*யார் உடலை உண்கிறேனோ அவர் புகழையே பாடுகிறேன்.*
*- ஜெர்மானிய பழமொழி* **(அடுத்த இதழில் தொடரும்)**



# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.176

## யூதித்து அதிகாரம் 1 முதல் 16 முடிய

உங்கள் விடைகளை பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❖ | | 19 | 08 | | 27 | ❖ | 13 | | ❖ |
| 23 | | | | ❖ | | | | 02 | |
| | | 01 | 24 | 31 | | | | 21 | |
| | 32 | ❖ | | | | 12 | ❖ | | |
| | | | 09 | | 17 | | 07 | | 10 |
| ❖ | | | 04 | 33 | ❖ | | | ❖ | |
| | 34 | | | | 16 | | | 29 | 14 |
| | | 20 | ❖ | 30 | 22 | ❖ | 25 | | 05 |
| 06 | | | 26 | | | | 11 | | |
| | | 15 | | 03 | | | 28 | 18 | ❖ |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. .......... அவர்களை நோக்கி, சகோதரர்களே துணிவு கொள்ளுங்கள்.
2. அதன்பின் அவரை அவர்களால் ............ முடியவில்லை.
3. ............ வீசுவோர் அனைவரும் — தடுத்தார்கள்.
8. உம் அடியவளின் சொற்களைத் ............ கூர்ந்து கேளும்.
11. என் கையால் இன்று ............ அழித்துவிட்டார் என்று அறிவித்தார்.
13. எனவே .......... வந்து உம் விருப்பப்படியே நடத்தும்.
15. பின் உம் ....... அனைத்தோடும் — செல்லலாம்.
16. அங்கு உணவு ....... நீடித்தவரை தங்கியிருந்தார்கள்.
23. நாம் பிடிபட்டால் ........ முழுவதுமே பிடிபடும்.
25. அதைத் தாண்டி — வடக்கே ........... அருகில் பாசறை அமைத்தார்கள்.
26. அப்போது பொன் — ஒலோபெரின் .......... கொண்டிருந்தான்.
31. ஆனால் அவனை .......... ஒரு மனிதனாகவே கருதினார்கள்.
34. அவர் ........ அடைந்தவராய்த் — தங்கியிருப்பார்.

### வலமிருந்து இடம்

2. ......... நாட்டு மக்களே எனக்கு மறுமொழி கூறுங்கள்.
4. நீ எங்களிடம் சொன்னதையே அவரிடம் ............
5. அந்நகர்களின் மக்களும் — அவனுக்கு .......... அணிவித்து — அளித்தனர்.
9. இன்று இரவும் இனியும் உனக்கு ........ எதுவும் நேராது.
10. தலையை .......... முடித்து மணிமுடியைச் சூடிக்கொண்டார்.
11. நீர் திட்டமிட்டவை — நின்று ............ உள்ளோம் என்றன.
12. அநீதியை வெறுக்கும் கடவுள் அவர்கள் ............ இருக்கிறார்.
15. ஆண்டவருக்கு மேள தாளங்களோடு .......... இசையுங்கள்.
16. பிறகு தம் ............ யெல்லாம் கொண்டு — துண்டித்தார்.
19. வழியில் ........ லூது என்னும் — கொள்ளையடித்தான்.
21. எல்லாம் வல்ல — உமக்கு ......... வழங்குவாராக என்று வாழ்த்தினார்கள்.
26. அவருடைய புகழ் ............. வளர்ந்தது.
28. ஓர் எபிரேயப் ........... நெபுகத்னேசர் — இழைத்து விட்டாள்.
34. .......... தோப்புகளை வெட்டி அழித்தான்.


### மேலிருந்து கீழ்

6. நம்மைப் ....... வாங்கவுமில்லை.
7. மனித ............... நினைப்பதையே நீங்கள் உணரமுடியாது.
12. எனினும் நம் கடவுளாகிய ஆண்டவருக்கு ..... செலுத்துவோம்.
21. உமது வலிமை .......... எண்ணிக்கையைப் பொறுத்ததன்று.
22. இப்போது என் — ஏற்படாதவாறு ...... அவர்களுக்கு நேரிடும்.
23. .......... கூடாரத்திற்குள் தனிமையாய் விடப்பட்டார்.
26. இது மொக்மூர் என்ற ........ ஓரத்தில் — அருகே இருந்தது.
27. எப்ராயிமின் ..........ப் படைகளே நீங்கள் யார்?
29. கிலயாத்தினரும் கலிலேயரும் — படு ....... செய்தார்கள்.
34. அவை அனைத்தையும் சேர்த்துக் கட்டி ............. க் கொண்டு — கொடுத்தார்.


### கீழிருந்து மேல்

6. .......... மறுப்பவர்களுக்கோ இரக்கம் காட்டாதீர்.
9. அப்பொழுது — மேதியர் மீது ........... செலுத்தி வந்தான்.
10. வாளுக்கு இரையாகுமுன்பே தாங்கள் ........ நகரின் — கிடப்பார்கள்.
12. .......... களால் உன்னை நிரப்புவாராக.
14. தன் உடைமைகள் — இருந்த........ என்ற உயர் — செய்யும்.
17. நிலத்தின் கடை எல்லைக்கே அவர்களை .......... கடத்துவேன்.
18. உமது ......... எதிர்த்து நிற்பவர் எவருமில்லை.
20. உம் பணியாளனின் வாயினின்று ........ எதுவும் வராது.
24. அதன் தூய்மைக்கேட்டுக்குக் — குருதி ....... வேண்டியிருக்கும்.
30. அவரும் அவருடன் இருந்தவர்களும் ......க் கிளைகளால் — கொண்டார்கள்.
32. இந்த மக்கள் ..... யரின் வழிமரபினர்.
33. ஏனெனில் அவர்களிடம் ........... இல்லை.
34. தங்கள் தலைப்பாகைமேல் சாம்பலைத் ........ கொண்டு — கூக்குரலிட்டார்கள்.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 174 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
வே. செல்வராசா,
இல:88/2, காட்டுப்பள்ளிவாசல்,
மூர்வீதி, மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
E. நிஷாந்தினி கூஞ்சு,
குழந்தை யேசு வீதி,
8ம் வட்டாரம், பேசாலை.

**மூன்றாம் பரிசு:**
வி. சியாமி அனுன்சிக்கா,
சின்னப்பண்டிவிரிச்சான்,
மடுக்கோல், மடு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 79 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 67 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 174ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. வி. தாசன் டலிமா, தலைமன்னார், கிராமம்.
02. யூ. ஜோனிஸ்ரன், சிறுத்தோப்பு,
03. புஸ்பா சேவியர், உவர்மலை, திருகோணமலை.
04. அல்பேட் வெல்கம் லேன், பாலையூற்று, திருகோணமலை.
05. ஆ. றாபன்ஜீசஸ் டலிமா, 5ம் வட்டாரம், வங்காலை.
06. ம. கிஷோபிகன், சிதம்பரபுரம், வவுனியா.
07. ஜ. இருதயமேரி இல: 54, கற்குளம் - 2, ஆசிக்குளம்.
08. ம. கவிதா, வன்னிக்கோட்டம், சிதம்பரபுரம், வவுனியா.
09. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
10. ச. கீர்த்தனா, கன்னாட்டி, மன்னார் வீதி, வவுனியா.
11. இ. டிலைக்சன், றம்பைக்குளம், வவுனியா.
12. க. துளசிகா, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்.
13. க. மடோனா, ஆசிகுளம், வவுனியா.
14. க. றெஜினோல்ட், ஆசிகுளம், வவுனியா.
15. F. கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
16. றா. மேரி ராஜ்மி டயஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
17. செல்வி. வயிலட் ஜோண், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
18. வி. வேஜின் டிலக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
19. சென்மேரிஸ் வீதி, அடம்பன்.
20. திருமதி. நிருபா ஜெராட், பெற்றா, மன்னார்.
21. கமிலஸ்ரீனா. யே. உயிர்த்தராசன் குளம்.
22. பா. நிஷாந்தினி உயிர்த்தராசன் குளம் முருங்கன்,
23. வி. சியாமி அனுன்சிக்கா, சின்னப்பண்டிவிரிச்சான் மடு.
24. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை
25. சி. வின்சன் யோட்ஸ், 143. S.P.V மடுக்கோயில் மடு.
26. யே. கமில்டன், உயிர்த்தராசன்குளம்.
27. பா. தர்ஷனி, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
28. N. செபமாலை மரியம்மா பீரீஸ், வங்காலை.
29. அ. வேஜின்செலினி, குமாணயங் குளம்,ஆட்காட்டிவெளி.
30. அ. மிராண்டா, குழந்தையேசுவீதி, பேசாலை.
31. நிமல், எமில்நகர், மன்னார்.
32. பி. நித்தியானந்தன் குருஸ், ஆனாள் நகர், வங்காலை.
33. என். லக்மினி குருஸ், வங்காலை.
34. சு. ஜெகநாதன், இல: 161, மடுக்கரை, நானாட்டான்.
35. அ. கிளேயறா, மாதகல்.
36. கொன்சலா, தாழ்வுபாடு, மன்னார்.
37. நிஷாந்தன், பண்டிவிரிச்சான், மடு.
38. அ. மேரி பற்றிமா, கீரி, மன்னார்.
39. ஆனந்தன், யாழ்ப்பாணம்.
40. றொசான், தோட்டவெளி.
42. நிமல்ராஜ், மன்னார்
43. அ. றொசாணி, சின்னப்பண்டிவிரிச்சான், மன்னார்.
44. எ. றொபட், பேசாலை, மன்னார்.
45. றமீசலா, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.
46. அ. நிறோசா, எமில்நகர், மன்னார்
47. றொபின், எழுவைதீவு, யாழ்ப்பாணம்.
48. எமில்டா, விடத்தல்தீவு.
49. ஜீவரெட்ணம், யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
50. த. ஆன் கெனோசிக்கா, நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.

## முருங்கனில் கிறிஸ்தவ ஒன்றிப்பு ........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்வில் முருங்கன் மறைக்கோட்ட முதல்வரும், கற்கிடந்தகுளத்தின் பங்குத்தந்தையுமான, அருட்தந்தை ச. மாக்கஸ் அடிகளாரும், மன்னார் முருங்கன் சேகரத்தின் மெதடிஸ்த முகாமைக்குரு அருட்திரு. ரவி முருகுப்பிள்ளை, மன்னார் சேகரத்தின் குரு அருட்திரு. ஜெகதாஸ் மற்றும் அருட் சகோதரிகளும், திருப்பணியாளர்கள் 50க்கு மேற்பட்ட மெதடிஸ்த இளைஞர்களும், 50க்கு மேற்பட்ட கத்தோலிக்க இளைஞர்களும் இந்நிகழ்வில் பங்கு பற்றினர். இந்த சிறப்பு உலக கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிகழ்வில் முருங்கன் கோட்ட முதல்வர் அருட்பணி. ச. மாக்கஸ் சிறப்பு ஒன்று கூடல் பற்றி இளையோருடன் கருத்துக்களை பகிர்ந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து மெதடிஸ்த மன்னார் சேகரத்தின் குரு ஜெகதாஸ் அவர்கள், கிறிஸ்தவர்களுக்கிடையில் எவ்வாறு ஒன்றிப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என வரலாற்றினையும், அத்தோடு நிகழ்காலத்தில் எமது மண்ணில் எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதையும் மிகவும் தெளிவாக எடுத்துச் சொல்லி உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து கிறிஸ்துவின் பணியாளர்கள் என்ற சபையைச் சேர்ந்த அருட்சகோதரி ஜெயா சில பயிற்சிகளை இளையோருக்கு கொடுத்தார்.

அருட்சகோதரி நிர்மலா (திருச்சிலுவை கன்னியர் சபை) தலைமைத்துவம் பற்றிய விழிப்புணர்வை இளையோரில் ஏற்படுத்த ஒரு விழிப்புணர்வு வழிகாட்டலை வழங்கினார். இந் நிகழ்வின் இறுதியில் YMCA எனும் அமைப்பு ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் நிர்வாக உறுப்பினர் சிலர் தெரிவு செய்யப்பட்டனர். முதல் தலைவராக அருட்தந்தை ச. மாக்கஸ் அடிகளாரும், உபதலைவராக அருட்திரு. ரவி முருகுப்பிள்ளை (மெதடிஸ்த திருச்சபை), செயலாளராக ஜெயறூபி (மெதடிஸ்த திருச்சபை), உப செயலாளராக பிரதீபா (கத்தோலிக்கம்), பொருளாளராக நந்தராஜ் (கத்தோலிக்கம்), போன்ற நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். YMCA நிர்வாக குழு உறுப்பினர்களாக: அன்புராஜ் டல்சி, அனந்தா கிங்சிலி, ரிச்சட் அனுராஜ் எனும் குழு உறுப்பினர்களும் ஒவ்வொரு பிரதேச அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதியாக YMCA அமைப்பில் இருந்து வருகை தந்த திருவாளர் பாஸ்கர் அவர்களினால் சில கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது. பின்னர் மறைகோட்ட முதல்வர் அருட்தந்தை ச. மாக்கஸ் அடிகளாரினால் நன்றி உரை நிகழ்த்தப்பட்டு 2.30 மணியளவில் இறுதி செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## மூன்று கூத்து நூல்களின்........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தலைமை தாங்கினார். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். வடமாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரெட்னம் வரவேற்புரை வழங்கினார். அறிமுக உரையை வடக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. அ. பத்திநாதன் நிகழ்த்தினார். நூல்களின் வெளியீட்டுரையை மன்னார் தமிழ்ச்சங்க நிறுவுனரும் கலையருவி அமைப்பின் இயக்குனருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார். நூலுருவாக்கப்பட்ட நாடகங்களின் சில காட்சிகள் இந்நிகழ்வின்போது மேடையேற்றப்பட்டன. பெருந்தொகையான நாட்டுக்கூத்து நாடக ஆர்வலர்கள் மன்னார் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து இந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர்.

## பேராலயப்பங்கின் மகா ஞானொ...

5ஆம் பக்கத் தொடர்ச்சி

வழிவகுத்ததுடன் இறைமக்கள் எல்லோரும் ஒரே குடும்பம் என்ற உணர்வையும் ஏற்படுத்தியது. இந்நிகழ்வானது அருகில் உள்ள கத்தோலிக்கர் அல்லாத நண்பர்களாலும் வெகுவாகமகா ஞானொடுக்க இறுதி நாட்களில் திருவருட்சாதனங்களை பெறாதவர்களை இனம் காணப்பட்டு திருவருட்சாதனங்கள் வழங்கப்பட்டன. 54 நபர்களுக்கு திருமுழுக்கு அருட்சாதனமும், அதிகமான இளைஞர்களுக்கு உறுதிபூசுதல் அருட்சாதனமும் வழங்கப்பட்டதுடன் 22 தம்பதியினர் திருமணம் எனும் அருட்சாதனத்தையும் பெற்றுக்கொண்டார்கள். இது பங்கில் உள்ள பல கிறிஸ்தவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இறுதி நாளன்று பேராலயத்தில் பணியின் நினைவாக அமல மரி தியாகிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட நினைவுச்சின்னத்தை பதிக்கப்பட்டதுடன் அனைத்து அமலமரி தியாகிகள் சபை குருக்களும் இணைந்து மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். அன்று மாலை பேராலயத்தில் கலைநிகழ்வுகள் நடாத்தப்பட்டன. இதில் இவ்வாண்டில் இலங்கைத்திருச்சபையின் மையப்பொருளாக நினைவு கூரும் இலங்கையின் அப்போஸ்தலர் புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதி 45 நிமிட நாடகமாக நடித்துக் காண்பிக்கப்பட்டு பலருடைய பலத்த பாராட்டைப்பெற்றது. இந்த மகாஞானொடுக்கம் சிறப்பாக அமைய 36 நாட்களாக அயராது அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைத்து அமலமரி தியாகிகள் சபை குருக்களுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவர்களுக்கு துணையாக நின்று உதவி புரிந்த வலய, அன்பிய பணியாளர்களுக்கும் இவற்றை ஒழுங்கு செய்த பங்குத்தந்தைக்கும் நன்றி கூறுகின்றோம்.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002 9782



## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம்** : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

# நீங்காத நினைவுகள்

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10
06
1970



உதிர்வு
03
03
2014

### திரு. பிரான்சிஸ் ராஜன்றிச்சேட்

(பரிகாரிகண்டல், முருங்கன்)

**“ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது” (திபா. 115:6)**

சிறந்த கல்வி நிறைந்த பொறுமை
இறைநம்பிக்கை உமது பெறுபேறுகள்.
தெய்வப்பிறவி, ராஜன்றிச்சேட் எனும் பெயரில்
இறைவன் எமக்குத்தந்த கொடை நீர்.
வையகத்தில் எவரும் குறைகூறாது வாழ்ந்தீர்
உமது திடீர் மறைவு விதியோ சதியோ அல்ல
அனைவரதும் மதிகேடேயாகும்.
இந்த இழப்பை நினைந்து நினைந்து வருந்துகிறோம்.
உம்மை எமக்குத் தந்த இறைவன் தனது சந்நிதியில் ஏற்றுக் கொண்டு மகிழ்ந்திருக்கச் செய்வாராக.

**பிரிவால் நினைந்துருகும்:**
**தந்தை, சகோதரங்கள், மக்கள் மருமக்கள்.**

## 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
03
06
1958



உதிர்வு
08
03
2012

### திருமதி. சந்தானாள் (மலர்)

(பொன்தீவுகண்டல், முருங்கன்)

**“ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது” (திபா. 115:6)**

வாழ்க்கை யெனும் பயணத்தில் வந்தாய் நீ மனைவியாக, தாயாக, அன்பென்னும் மதுவருந்தி இருந்தோமே மகிழ்ச்சியாக, உழைப்பென்னும் உளன்று கோலால் உயர் வெனும் தடம்பதித்தோம் ஆலமரமாய் வளர்த்துவிட்டு அந்தரத்தில் விட்டுவிட்டாய். விதியோடு மரணம் வந்து விலையாகி போனதேனோ கண்களிலே வடிகிறதே இரத்தக்கண்ணீர் துடைப்பதற்கோ அருகில் உன் கரங்களில்லை உன்னைப்போல் ஒரு பெண் தெய்வம் பிறக்க வேண்டும் இப்பூமிதனில்

**பிரிவால் நினைந்துருகும்:**
**குடும்பத்தினர்**

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08
11
1951



உதிர்வு
23
03
2007

### திரு. யோசேப் மனுவேல்பிள்ளை

(பெரிய பண்டிவிரிச்சான், மடு)

**“என்னிடத்தில் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்” (யோவான் 6:30)**

வாழ்க்கை சொல்லித்தரும் பாடம் முழுமையாய் படிக்கும் முன்னரே அச்சம் ஒன்று மனதை ஆட்கொள்ள அதற்கான காரணம் அறியும் முன்னரே கணக்கில்லா நிலங்கள் கணக்கில் இருந்தாலும் அளவாக அளந்து வைத்த ஆறடி நிலத்தை சொந்தமாக்கிக் கொண்ட எம் அன்புத் தந்தையே ஆண்டுகள் பத்து ஆன போதும் ஆறாது எம் துயர் ஆற்ற முடியவில்லை எமது மனதின் காயங்களை கசிந்த வழிகள் காய மறுக்கின்றனவே மறைந்திருந்தாலும் உனையது மறந்திடாது ஒவ்வொரு நொடியும் உம் நினைவுகளோடு வானகத் தந்தையின் வலப்புறமிருக்க வாஞ்சையோடு வேண்டுகின்றோம் - எம் வாழ்நாள் எல்லாம்.

**பிரிவால் நினைந்துருகும்: மனைவி, பிள்ளைகள்.**

## பணம் அல்ல, பிறரை அன்புகூர்வதே...

**1ஆம் பக்கத் தொடர்ச்சி**

லூக்கா நற்செய்தியில் கொடுக்கப்பட்டுள்ள செல்வரும் இலாசரும் என்ற உவமையை மையப்படுத்தி, தனது தவக்காலச் செய்தியை வழங்கியுள்ள திருத்தந்தை, செல்வரை விட, ஏழையான இலாசரைப் பற்றியே நற்செய்தி விரிவாகப் பேசுகிறது என்பதையும் விளக்கியுள்ளார். பிற மனிதர்களும் ஒரு கொடையே, ஒருவருக்கொருவர் உறவைப் பேணுவது என்பது பிறரின் மதிப்பை நன்றியுணர்வுடன் ஏற்பதில் அடங்கியுள்ளது என்றும், செல்வரின் வீட்டு வாயிலில் ஏழை மனிதர் இருப்பது தொந்தரவல்ல, இது மனமாற்றத்திற்கான அழைப்பு என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை.

அண்டை வீட்டாரோ அல்லது அறிமுகமற்ற ஏழையோ ஒவ்வொரு மனிதரும் ஒரு கொடை என்பதால் நம் இதயக் கதவைப் பிறருக்குத் திறக்க இவ்வுவமை அழைப்பு விடுக்கிறது என்று கூறியுள்ள திருத்தந்தை, தேவையில் இருக்கும் அனைவரிலும் இயேசுவைக் கண்டு அவர்களுக்கு நம் கதவுகளைத் திறக்க ஏற்றது இத்தவக்காலம் என்று கூறியுள்ளார். இத்தகைய மக்களை ஒவ்வொரு நாளும் சந்திக்கிறோம், நாம் சந்திக்கும் ஒவ்வொரு வாழ்வும், ஏற்கப்பட, மதிக்கப்பட, அன்பு கூரப்பட, தகுதியுடைய ஒரு கொடை, நலிந்தோரின் வாழ்வை வரவேற்று அன்புகூரவும் நம் கண்களைத் திறக்கவும் இவைவார்த்தை உதவுகிறது என்றார் திருத்தந்தை.

## தப்பங்காக உதயம் பெறும்....

**5ஆம் பக்கத் தொடர்ச்சி**

1987ஆம் ஆண்டு தொடக்கம் தச்சனாமருதமடு பங்கின் துணையாலயமாக இருந்த காலத்தில் பங்குத்தந்தையாக இருந்த அருள்பணி. அருள்நாதன் அவர்கள் மக்களின் விசுவாசத்தை குறியிடத்தக்கவிதத்தில் வளர்த்துவந்தார். 1997ஆம் ஆண்டு எடிபல இராணுவ நடவடிக்கையின் போது மக்கள் எல்லோரும் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றதாலும் இராணுவ நடவடிக்கையாலும் ஆலயமும் பகுதியளவில் சேதமடைந்தது. மக்கள் மீண்டும் தமது இடங்களிற்கு குடியேறிய பின்னர் பண்டிவிரிச்சான் பங்குடன் துணை ஆலயமாக இயங்கி வந்தது. இவ்வாலயம் புதிதாக கட்டப்படவேண்டுமென ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசேப்பு அவர்கள் பெரும் முயற்சி எடுத்து பண்டிவிரிச்சான் பங்கில் பணியாற்றிய பங்குத்தந்தையர்களின் ஊடாக, மடுப்பரிபாலகர் ச. எமிலியானுஸ்பிள்ளையின் ஒத்துழைப்புடன் ஆலயத்தை புதிதாக நிர்மாணித்து 2010ஆம் ஆண்டு ஆயர் அவர்களே அபிஷேகம் பண்ணி திறந்துவைத்தார்.

இவ்வாறு பல பங்குகளின் துணையாலயமாக இயங்கி வந்த இவ்வாலயம் கடந்த 2016ஆம் ஆண்டு வைகாசி மாதம் தொடக்கம் 2ஆம் கட்டை, பூமலர்ந்தான், தேக்கம் ஆகிய புதியதுணை ஆலயங்களை உள்ளடக்கி பரீட்சார்த்த பங்காக இயங்கி வருகின்றது. அருட்பணி. ம.க. அருள்பிரகாசம் அடிகளார் இப்பரீசார்த்த பங்கின் முதற்பங்குத்தந்தையாக செயற்பட்டு வருகின்றார்.

அருட்தந்தை அவர்களின் அயரா முயற்சியின் பயனாக இந்து மற்றும் பௌத்த மதத்தவர்களைத் திருமணம் செய்திருந்த பல கத்தோலிக்கர்களை இனங்கண்டு, அவர்களுடைய திருமணங்களை கத்தோலிக்க முறைப்படி ஒழுங்குபடுத்தியதால் மேலும் பல கத்தோலிக்கர்கள் மீண்டும் ஆலயத்திற்கு வந்து தமது விசுவாசத்தில் உறுதியடைந்து வருகின்றனர்.

புதிய குடியேற்ற கிராமமாகிய 2ஆம் கட்டை கிராமத்தில் கத்தோலிக்கர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களின் உதவியுடனும், மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி விக்ரர்சோசை அடிகளாரின் வழிநடத்தலில் அவ்விடத்தில் சிறிய புனித அந்தோனியார் ஆலயம் கட்டி அக் கத்தோலிக்கர்களுடைய அனைத்து வழிபாடுகளையும் நிறைவேற்ற வருகிறார்.

மேலும் பூமலர்ந்தான் கிராமத்தில் புனித யோசப்வாஸ் ஆலயமும், தேக்கத்தில் புனித லூர்து அன்னை ஆலயமும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 2ஆம் கட்டை புனித அந்தோனியார் ஆலயத்திலும் மடுறோட் புனித சிந்தாத்திரைமாதா ஆலயத்திலும் திருப்பலிகள் நடைபெற்று வருகின்றது. நாள் திருப்பலிகள் 2ஆம் கட்டை புனித அந்தோனியார் ஆலயத்தில் செவ்வாய் கிழமைகளிலும் பூமலர்ந்தான் புனித யோசப்வாஸ் ஆலயத்தில் வியாழக்கிழமைகளிலும் மாதத்தில் ஒரு தடவை தேக்கம் புனித லூர்து அன்னை ஆலயத்திலும் நடைபெற்றுவருகின்றது.

இவ்வாறு புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தை பிரதான ஆலயமாகக் கொண்டு மடுறோட் பரீட்சார்ந்த பங்கு ஆரம்பமாகிய பின்னர் இவ்வாலயத்தில் திருப்பலிகளும், திருவருட்சாதனங்களும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றது. 2016ஆம் ஆண்டு ஆலயத்திருவிழாவின் முதல் நாள் கொடியேற்றமன்று எமது சிறார்களுக்கு முதன்நன்மை வளங்கப்பட்டது.

இவ்வருடம் 2017ஆம் ஆண்டு மாசிமாதம் 19ஆம் திகதி எமது மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் பேரருட்கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் குருமுதல்வருடன் வருகைதந்து எமது பங்குக்குட்பட்ட 18 இளையோருக்கு முதல்தடவையாக உறுதிப்பூசுதல் திருவருட்சாதனத்தை நிறைவேற்றினார்.

எமது பங்கிற்கு முதல்முதல் வருகைதந்த ஆயரை பங்கு மக்கள் பான்ட் வாத்திய இசையுடன் வரவேற்று மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவித்தனர்.

இந்நிகழ்வுகளுக்கான சகல ஏற்பாடுகளையும் பங்குத்தந்தை அருட்பணி அருள்பிரகாசம் அடிகளாரின் வழிநடத்தலில், ஆலய மேய்ப்புப்பணிச் சபையினரும், மறையாசிரியர்களும், ஏனைய துணை ஆலய இறைமக்களை உள்ளடக்கிய பங்கு சமூகமும் ஒன்றிணைந்து மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*தகவல்: ரஞ்சித் இராஜேஸ்வரன் சுஜி*

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002978 2

## 31ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20
04
1942



உதிர்வு
02
04
1986

### திருமதி. சைனம்மா பிரான்சிஸ்,

(பரிகாரிகண்டல், முருங்கன்)

கடமை கண்ணியம் கட்டுப்பாடு கடவுள் நம்பிக்கை கல்வியில் நிறைவு உங்களது சிறப்பாகும்.
அழுதும் தேனும் எதற்கு நீ அருகினிலிருக்கையிலே எமக்கு என்றிருந்த எம்மை அரவத்தின் தீண்டுதல் தீண்டுதல் பிரித்துவிட்டது. ஆனாலும் ஆண்டவனின் அழைப்பு என்று உணருகின்றோம் அமுதூட்டிய உங்கள் கரங்களையும் அன்பைப் பொழிந்ததிருமுகத்தையும் அறிவிந் சிறந்த பண்புகளையும் எம்மால் மறக்கவே முடியாது.
இறை நம்பிக்கையும் மனச்சாட்சியும் தவறாத நீங்கள் குறையேதுமில்லாது இறைவனிடத்தில் வாரிசுகள் சகிதம் வாழ்விர்களாக.

**பிரிவால் நினைந்துருகும்:**
**குடும்பத்தினர்.**

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு.Dr.எலியாஸ் இம்மானுவேல் பீரிஸ்**
**(பேசாலை, மன்னார்)**

**மலர்வு : 25 - 03 - 1938**
**உதிர்வு : 03 - 03 - 2016**

**“நித்திய வாழ்வில் பங்களித்தருளும் ஆண்டவரே”**

பாசத்தை அள்ளி வழங்கி,
பணியை சிறப்புடனே ஆற்றி,
அவனியில் சீருடன் வாழ்ந்து,
தவிக்கவிட்டு எங்கே சென்றீர்களோ!

ஓராண்டு ஓடி மறைந்தாலும்,
உம் பிரிவை எம்மால் மறக்க முடியவில்லையே,
ஒவ்வொரு கணமும் உம்மையே
எங்கள் மனம் தேடுகின்றது... தவிக்கின்றோம் ஐயா
இனிவரும் ஜென்மத்திலும் இவ் உறவு தொடரட்டும்.

**“நித்திய இளைப்பாற்றியை அவருக்கு அளித்தருளும் ஆண்டவரே முடிவில்லாத ஒளி அவர் மேல் ஒளிர்வதாக”**

**பிரிவால் நினைந்துருகும்,**
பாசமுள்ள மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



**ஜெயராஜா மகீதன் (தம்பா)**
**(மூர்வீதி, மன்னார்)**

**மலர்வு : 21 - 04 - 1981**
**உதிர்வு : 30 - 03 - 2016**

*“மரணமே! உன் கூர் எங்கே?*
*பாதாளமே! உன் ஜெயம் எங்கே?”*
*(1கொரி.15:55)*

மகிமைக்குள் மகிழ்ந்திருக்கும் மகீதா!
மறைந்து ஆண்டு நிறைவதின்று கனவா!
கண்ணுக்குள் நிற்கின்றாய்,
கனவினிலே வருகின்றாய்
கண்ணீருள் எமையெல்லாம்
கலங்கிடவே வைக்கின்றாய்
ஒரு நாள் முன்னுக்கு வாராயோ!
முகமதனைக் காட்டாயோ!
எண்ணத்திலென்றும் எம்முடனே வாழும் நீ
விண்ணுலகில் என்றும்
வீற்றிருப்பாய் மதிப்புனே

**பிரிவால் நினைந்துருகும்,**
அம்மா, அப்பா, அக்கா குடும்பம்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
24
12
1963



**உதிர்வு**
30
03
2016

**திருமதி. சூசையப்பு, அந்தோனிக்கம் குரூஸ்**
**(8ம் வட்டாரம், பேசாலை)**

**“சீவியத்தில் நேசித்தவர்களே என்னை மரணத்திலும் மறவாதீர்கள்”**

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
நினைவுகள் எல்லாம் நீங்கள்தான்
அம்மா மறக்க முடியவில்லை உங்களை
மனங்கள் மௌனித்து ஜடங்களாய் வாழ்கின்றோம். பார்த்து
பார்த்து ஆசையாய் வளர்த்து பாதியிலே தவிக்க விட்டீர்களே!
எல்லாம் இருந்தும் அம்மா நீங்கள் இல்லையே அம்மா.
ஆண்டவரே எங்கள் அம்மாவை உம் அன்பில் சேர்த்துவிடு.

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவர், பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
18
10
1955



**உதிர்வு**
25
03
2016

**திரு.சூசையப்பு சிப்பிரியான் லெம்பேட்**
**(மன்னார்)**

அன்பின் பிறப்பிடமே.
எம் குடும்பச் சுடர் ஒளியே...
அன்போடு அப்பா என்றழைக்க நீங்களில்லையே...
காலங்கள் பல கடந்து சென்றாலும்
இன்று எங்கள் உணர்வுகளோடும், நினைவுகளோடும்
கலந்து வாழ்கின்றீர்.
ஓராண்டுகள் அல்ல ஓராயிரம் ஆண்டுகள் மறைந்து
சென்றாலும் ஒரு கணமாவது உங்களை நினைக்காது
எங்கள் மன ஓரவிழிகள் உறங்குவதில்லை...

**பிரிவால் நினைந்துருகும்,**
**குடும்பத்தினர்**

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
01
12
1935



**உதிர்வு**
12
03
2016

**திரு.அதிரியான் பெலேசியான் குரூஸ்**
**(முள்ளிக்குளம்)**

**“என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன்” (யோவான். 6:39)**

முள்ளிக்குளத்தின் முத்தே எம் வாழ்வு பாதையின்
வளிகாட்டியே எம் அன்பு தந்தையே
நீர் எம்மை விட்டுப் பிரிந்தாயோ
இல்லை, நீ இறைவனடி சேர்ந்தாயே இறைவன் பாதம் நீர்
சேர்ந்தும் ஓராண்டு கழிந்திருந்தும் எம் மனம்
பொறுக்குதில்லை இறைவன் உன்னை அழைப்பதனை
எப்படி இருந்திடினும் இறைவன் சந்நிதியில் - நீர்
மகிழ்ந்திருக்க நாம் இங்கு இவ்வுலகில் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும், குடும்பத்தினர்**

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
13
08
1934



**உதிர்வு**
27
03
2015

**திரு. பாவிலுப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர்**
**(இளைப்பாறிய அதிபர், முத்தரிப்புத்துறை)**

காலச் சுழற்சியிலே நிலையாமை என்பதுதான் நிதர்சனமாம்,
காரணங்கள் பல கூறி கவலையை ஆற்றிட
ஐயா உங்கள் பிரிவு சாதாரணமல்ல நீங்கள் எழுதிய
எழுத்துக்கள் தட்டிக்கொடுத்துப் பெற்ற சாதனைகள் அழகாய்
நடத்திய ஆங்கிலப்பாடங்கள் வீட்டுக்குத் தெரியாமல் செய்த
உதவிகள் கடந்து போவோரையும் திரும்பிப்பார்க்கவைக்கும்
புன்னகை பிறர் சொல்லிக் கேட்கையில் எம் கண்கள்
நிறைகிறதே மரணம் எல்லோருக்கும் நிகழும்தான் உங்களுக்கு
அது விதிவிலக்காய் இருந்திருக்கக் கூடாதா...
உங்கள் ஆன்மா இறை சந்நிதியில் நிறைவாழ்வு பெற்றிடவே
இறைஞ்சுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர் உறவினர்கள்.**

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
06
03
1973



**உதிர்வு**
23
03
2013

**திரு. கமலசேகரம் சதீஸ் சேகர் (சதீஸ்)**
**(வேப்பங்குளம், வவுனியா)**

**“அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது” (1கொருந்தியர் 15:42)**

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவில்
வசித்தவருமான சதீஸ் சேகர் அகாலமரணமாகி எம்மை விட்டு
பிரிந்து நான்கு ஆண்டுகள் கடந்தாலும் அவரின் நினைவோ
எம்மை விட்டு ஒருபோதும் பிரிவதில்லை.
அன்னார் ஞா. அந்தோனிப்பிள்ளை அவர்களின் பேரனும்
(மன்னார் கச்சதீவு மூப்பர்) கமலசேகரம் மங்கையின் அன்பு
மகனும் மதி, டயானா, டயஸ்சின் அருமை சகோதரரும்
ஆவார்.

**பிரிவால் நினைந்துருகும்,**
**பெற்றோர், சகோதரங்கள்**

## 1ம் ஆண்டு, 3ம் ஆண்டு நினைவஞ்சலி





**திரு. அ. அருளப்பு வாஸ்**

**திரு. அ. அன்ரன் பிரதீபன் வாஸ்**

**(4ம் வட்டாரம், வங்காலை)**

மலர்வு :- 26.06.1948
உதிர்வு :- 01.03.2016

மலர்வு :- 26.06.1975
உதிர்வு :- 14.01.2014

அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
முகத்தில் புன்னகையுடன் பாரினிலே நீங்கள் வாழ்ந்தீர்கள்.
இரக்கமும் இறைபற்றும் ஊக்கமும் உதவுதலும்
நீங்கள் எமக்களித்துச் சென்ற சொத்துக்கள்!
காலத்தின் சதி உங்களைப் பிரித்தது
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த நாட்கள்
என்றுமே எம் நினைவில் அழியாது.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.